# செந்தமிழ்

தொகுதி : 94 மார்ச் 2000 பகுதி : 3

திங்கள் இதழ்

மதிப்புறு ஆசிரியர் மா. தனுக்கோடி பாண்டியன் பி.ஏ., பி.எல்.,
மதுரைத் தமிழ்ச்சங்கம், மதுரை–1.

ஆசிரியர் பேரறிஞர் நா. பாலுசாமி
எம்.ஏ., பி.எல்., எம்.லிட்., எம்.எட்., பி.எச்.டி.,

## தமிழ்ச்சங்க ஆட்சிக் குழு

| | |
|---|---|
| திரு. நா. குமரன் சேதுபதி | தலைவர் |
| திரு. எம். பி. ஆர். மலையாண்டி என்ற அசோக் | துணைத்தலைவர் |
| திரு. மா. தனுக்கோடிபாண்டியன் | செயலாளர் |
| திரு. மா. சங்கரபாண்டியன் | உறுப்பினர் |
| திரு. கே. எஸ். டி. இராசேந்திரன் | உறுப்பினர் |
| திரு. டாக்டர். என். சேதுராமன் | உறுப்பினர் |
| திரு. கே. கந்தசாமி | உறுப்பினர் |
| திரு. வெ. பழனிச்சாமித்தேவர் | உறுப்பினர் |
| திரு. அ. சாமிஜயா | உறுப்பினர் |
| திரு. வே. திருவரங்கராசன் | உறுப்பினர் |
| திரு. இரா. அழகுமலை | உறுப்பினர் |
| திரு. க. சி. அகமுடை நம்பி | உறுப்பினர் |
| திரு. எஸ். பரங்குன்றம் | உறுப்பினர் |

## செந்தமிழ் ஆசிரியர் குழு

| | |
|---|---|
| பேரறிஞர். | நா. பாலுசாமி (ஆசிரியர்) |
| பேரறிஞர். | தமிழண்ணல் |
| பேரறிஞர். | செ. கந்தசாமி |
| டாக்டர். | என். சேதுராமன் |
| பேரறிஞர். | ம. ரா. போ. குருசாமி |
| பேரறிஞர். | சி. கதிர் மகாதேவன் |
| பேரறிஞர். | கு. துரைராசு |
| பேரறிஞர். | அ. அ. மணவாளன் |
| பெரும்புலவர். | இரா. இளங்குமரன் |
| பேரறிஞர். | அ. தட்சிணாமூர்த்தி |
| பேரறிஞர். | எஸ். எம். கமால் |
| பேரறிஞர். | ஈ. கி. இராமசாமி |
| பேராசிரியர். | சே. அரிராமநாதன் |
| பேரறிஞர். | அ. மா. பரிமணம் |

# செந்தமிழ்

திங்கள் இதழ்

| இதழ் கட்டணம் | உள்நாடு | வெளிநாடு |
|---|---|---|
| ஆண்டுக்கட்டணம் | ரூ. 60 | |
| வாணாள் கட்டணம் | ரூ. 500 | ரூ. 1000 |
| புரவலர் கட்டணம் | ரூ. 1000 | ரூ. 2000 |
| தனி இதழ் கட்டணம் | ரூ. 6 | |


மதிப்புறு ஆசிரியர் *மா. தனுக்கோடி பாண்டியன்* பி.ஏ., பி.எல்.,

மதுரைத் தமிழ்ச்சங்கம், மதுரை–1.

ஆசிரியர் பேரறிஞர் *நா. பாலுசாமி*

எம்.ஏ., பி.எல்., எம்.லிட்., எம்.எட்., பி.எச்.டி.,

# பொருளடக்கம்

1. கனடா, அமெரிக்க
நாடுகளில் சில நாட்கள் ... 77
-பேரறிஞர் பா. சூரியநாராயணன்

2. ஆறுபடைவீடும் இருதேவியரும் ... 84
- பேரறிஞர் நா. சுப்ரமண்யன்

3. அப்பர் தேவாரத்தில் சமுதாய உணர்வு ... 91
- பேரறிஞர் அ.மா. பரிமணம்

4. வரலாறு கூறும் பூலாங்குறிச்சி ... 101
- பேரறிஞர் வெ. வேதாசலம்

5. ஆதியூர் அவதானி சரிதத்தில்
தீண்டாமை எதிர்ப்புச் சிந்தனைகள் ... 109
- பேரறிஞர் தா. ஈசுவரபிள்ளை

# கனடா, அமெரிக்க நாடுகளில் சில நாட்கள்

-பேரறிஞர். **பா. சூரியநாராயணன்**

*உலகம் தழீஇயது ஒட்பம், மலர்தலும்*
*கூம்பலும் இல்லது அறிவு* (குறள்-426)

தமிழ் நாட்டில் பிறந்து, வளர்ந்து கல்வி கற்ற ஒருவர்க்கு, தான் கற்ற நூல்கள் பிறநாடுகளைப் பற்றி அளித்த அறிவுச் செல்வத்தைக் கனடா, அமெரிக்க நாடுகளுக்குச் சென்று பெருக்கிக் கொள்ளுதல் ஒரு சுவையான நிகழ்ச்சி தானே? இத்தகைய ஒரு வாய்ப்பு மருத்துவம் செய்து கொள்ளுதற்குக் கனடா நாட்டுக்கு மனைவியுடன் நான் சென்றபோது கிடைத்தது. ஆகஸ்டு முதல் (1999) நவம்பர் முதல் வாரம் வரையுள்ள காலமே அந்நாடுகளுக்கு மிக்க குளிரும் மிக்க வெப்பமும் இல்லாத காலம். இந்த இலையுதிர் காலம் (Fall), எங்களைப் போன்ற முதியோருக்கு விமானப் பயணத்துக்கு ஏற்றது. கனடாவில் செயின்ட் காதரைன் என்ற ஊரில் இளைய மகன் மருத்துவராக இருப்பதனால் அவனுதவியுடன் வேற்றுநாட்டு மருத்துவ வல்லுநரைக் காணவும், அவர்கள் நோயாளிகளை எவ்வாறு அணுகி மருத்துவ சோதனைகள் செய்து மருத்துவம் செய்கின்றனரென்று அறியவும் முடிந்தது.

இந்தியாவிலிருந்து வெளிநாடுகளுக்குச் செல்ல நம் அரசாங்கம் தரும் இசைவுச்சீட்டு (Pass), போகும் நாடுதரும் நுழைவுச்சீட்டு (Visa), முதலியவை சென்னையில் வாங்கும்போது, முதியோராயிருப்பின் உயிர்ப் பாதுகாப்புக்காக விதிக்கப்பட்டபடி, வயதுக்குரிய தொகைகட்டி உயிர்காப்புப் பெற்றால்தான் விமானத்தில் போவதற்கும், திரும்பி வருவதற்கும் பயணச்சீட்டுகளைப் பெற இயலும். பிரிட்டிஷ் ஏர்வேஸ் விமானத்தில் சென்னையிலிருந்து புறப்பட்டு எங்கும் நிற்காமல் லண்டன் சென்று, அங்கு சிறிது பொழுது தாழ்ந்த பின் வேறொரு

பிரிட்டிஷ் ஏர்வேஸ் விமானத்தில் அட்லாண்டிக் சமுத்திரத்தின் மேலே பறந்து, கனடா நாட்டின் வடகிழக்கில் உள்ள டொராண்டோ நிலையத்தை அடையலாம். சென்னையிலிருந்து 9 மணி நேரமும், லண்டனிலிருந்து 8 மணி நேரமும் பயணம். சென்னையிலிருந்து மேற்கே செல்லச் செல்ல இந்திய நேரத்தை விடக் கால அளவு குறைவாகக் காணப்படுகிறது. இந்த விமானத்தில் பணிபுரிவோர் பயணிகளை மிகவும் வரவேற்றும், வழியனுப்பியும் வைக்கின்றனர். நெடும்பொழுது விமானப்பயணம் செய்வதால், சலிப்புத்தட்டாமல் இருக்க அவ்வப்போது சிற்றுண்டி வழங்கியும், படிக்க நாளேடுகள் அளித்தும் உதவுகின்றனர். முதியோர் பின்புறம் சாயுத்தக்க இருக்கையில் பொருத்தப்பட்டுள்ள சிறிய தொலைக்காட்சிக் கருவியையும் பயன்படுத்தலாம். சைவ உணவு, ஊனுணவு, மதுவகைகள் அவற்றை அருந்துவோருக்குப் பறிமாறப்படுகின்றன. விமானம் விண்ணில் மிக உயரத்தில் வெகுவேகமாகப் பறந்து செல்லுவதால், நிலத்தில் எதனையும் காணுதல் இயலாது

வெப்பம் மிகுந்த நாட்டிலிருந்து குளிர்மிக்க நாட்டிற்குச் செல்லுதலால் விமானத்தில் வெப்பம் தரும் கருவியும், குளிர்மிக்க கருவியும் தேவைப்படும்போது இயக்கப்படுகின்றன. லண்டனிலும் டொராண்டோவிலும் விமான நிலையத்தில் பயணிகளின் பெட்டிகளை இறக்கியும் ஏற்றியும் வைப்பதில் சுமையாட்கள் காலந்தாழ்க்காமல், நாணயமாக நடந்து கொள்ளுகின்றனர் முதியோர், ஊனமுற்றோர் விமானத்தினுள் வரவும், காத்திருக்கும் பரந்த மண்டபத்திற்குப் (Lounge) போகவும், சக்கர நாற்காலியைக் கொணர்ந்து அமர்த்தி, தள்ளிக்கொண்டு போகின்றனர்; ஏறி இறங்கும் ஏற்றத்திலும் (Lift) கூடவே வந்தும், நெடுந்தூரத்திலுள்ள மண்டபத்திற்குப் போகவும், வரவும், சிறிய உந்து வண்டியில் (Buggy) ஏற்றிக்கொண்டு போய்விடுகின்றனர்; இறங்குமிடத்திலும், ஏறுமிடத்திலும் பரிசோதனைக்காக உலோகத்தகடு பதித்த குறுகலான வழியில் பயணிகள் செல்லுதல் வேண்டும்.

நுழைவுச்சீட்டு முதலியவற்றை அலுவலரிடம் காட்டி, கனடாவில் தங்கும் காலம், பயணத்தின் நோக்கம் முதலியவற்றைத் தெரிவித்து, எங்களை அழைத்துப் போய் உந்துவண்டியோடு வந்திருந்த என் மகனுடனும், குடும்பத்துடனும் 120 மைல் தொலைவிலுள்ள செயின்ட் காதரின் என்ற ஊருக்குச் சென்றோம்.

**சாலை விதிகள்** அந்நாட்டுச் சாலை விதிகள் இந்நாட்டு விதிகளினின்றும் வேறுபட்டவை; இங்கு வண்டிகளும், நடப்போரும் இடதுபுறம் செல்லுதல் வேண்டும்; அங்கு வலதுபுறமே யாவருக்கும் உரியது; உந்து வண்டிகளும் மணிக்கு 50 மைலுக்குக் குறைந்த வேகத்தில் செல்லமாட்டா; சென்றால், பின்னால் வருவனவற்றிற்குத் தடை ஏற்படுமாகையால், இவ்வாறு விதியை மீறும் வண்டியின் எண்ணைக் கணிப்பொறி மூலம் காவலர் கண்டறிந்து, அது வரும் வழியில் நின்று நிறுத்தி நடவடிக்கை எடுப்பார்கள்; சாலையில் நடப்போரைக் காணுதலரிது. அதனால் ஆட்கள் மீது உந்து வண்டிகள் மோதுதல் இல்லை. வண்டிகளை ஒழுங்குபடுத்தக் காவலர் எவரும் சாலையில் நிற்பதில்லை. ஏனென்றால் சாலைகள் சேருமிடத்தில், குறுக்கே கட்டித் தொங்கவிடப்பட்டுள்ள அறிக்கையைப் பார்த்து கொடியில் தொங்கும் சிவப்பு விளக்கு ஒளிவீசினால் வண்டியை நிறுத்தியும், பச்சை விளக்கு ஒளிவிசினால் ஓட்டுநர் வண்டியைத் தான் விரும்பும் சாலையில் இயக்கியும் செல்வார். அறிக்கைப் பலகைகளில் சேரும் இடம் பிரஞ்சு மொழியிலும், ஆங்கிலத்திலும் எழுதப்பட்டுள்ளன. கனடா முதலில் குடியேற்றநாடாக பிரஞ்சியர்வசமும்..1763இல் ஆங்கிலேயர் வசமும்வந்தது. 1867இல் சுயாட்சி நாடாக ஆயிற்று. சாலைகளும் ஒன்றை ஒன்று இங்கிருப்பது போல் வெட்டிச் செல்லமாட்டா. சிறிது தூரம் சுற்றி வளைந்து திரும்பவும் வந்து சேரும். அல்லது சில இடங்களிலமைக்கப்பட்டுள்ள மேம்பாலத்தின் வழியாகக் கடந்து செல்லும். இதற்குத் தேவையான பரந்தஇடம் அந்நாட்டிலிருக்கிறது.

கனடா நாட்டின் பரப்பளவு 9,970,600 சதுர கிலோ மீட்டர்

ஐக்கிய அமெரிக்க நாட்டின் பரப்பளவு 9.159.100 சதுர கிலோ மீட்டர்

இந்தியாவின் பரப்பளவு 3.287300 சதுர கிலோ மீட்டர்

இங்குக் கொடுக்கப்பட்டுள்ள பரப்பளவுகளிலிருந்து இந்திய நாட்டின் பரப்பளவைவிட அமெரிக்காவின் பரப்பளவு ஏறக்குறைய 2.5 பங்கு அதிகமென்றும், கனடாவின் அளவு 3.5 பங்கு அதிகமென்றும் தெரிந்து கொள்ளலாம். சாலைகளெல்லாம் ஒரே சீராக உடைக்கப்பட்ட சிறு சரளைக் கற்களாலமைக்கப் பட்டுத் தாரினால் மெழுகக்பட்டுள்ளபடியால், வண்டிகள் குலுக்கல் இல்லாமல் வேகமாகச் செல்லமுடியும். ஒரு இடத்திலாவது குழியோ பள்ளமோ இல்லை. ஒலியினால் இடையூறு கிடையாது. பகலிலும் எல்லா வண்டிகளிலும் முன்பக்க பெரிய விளக்குகள் ஒளிவீசும். பேரொலி எழுப்பிக் கொண்டு வெகு வேகமாகச் சிறு உந்துகள் (Scooter, Motor Cycle) நம் நாட்டில் செல்லுவதைப் போல அங்குப் பார்க்க இயலாது. காவலதிகாரிகளிடம் மட்டிலுமே சிறு உந்துகள் இருக்கும்.

**உழைக்கும் மனப்பான்மை**. அந்நாட்டில் சிறுவர் முதல் முதியோர் வரை ஒவ்வொருவரும் எந்த வேலை கிடைத்தாலும் அதை ஊக்கமாகவும் மகிழ்ச்சியுடனும் செய்து பொருள் தேடுகின்றனர். ஒவ்வொரு வீட்டைச் சுற்றிலும் உள்ள புல்லைக் கத்தரிக்கும் சிறு தள்ளு வண்டியினால் ஒரே சீராக வெட்டி அழகாக வைத்துக்கொண்டிருந்த ஒருவரைப் பார்த்தேன்; அவருடைய தகப்பனார் பத்திரம்பெற்ற கணக்காளர் (Chartered Accoutnant). வீடு ஒவ்வொன்றும் மற்றவற்றினின்றும் தனித்தனியாகக் காற்றோட்டமும், தண்ணீர் உடையதாகவும் இருக்கிறது. பிச்சை எடுப்போரைப் பார்த்தலியலாது. ஊனமுற்றோர், உழைக்க இயலாத முதியோர், அகதிகள் ஆகியோருக்கு அரசாங்கம் மாதப்படி அளிக்கிறது. வீடு பல சிறிய, பெரிய அறைகளை உடையது. தொலைபேசி,

தொலைக்காட்சி, கணிப்பொறி, இன்டர்நெட் முதலியவை உண்டு. வீட்டை ஒட்டி அல்லாமல் சிறிது விலகியே மரங்கள் வளர்க்கப் படுகின்றன. பூச்செடிகள் மட்டுமே வீட்டினருகே இருக்கும். குளியலறையில் வலது புறம் திருப்பினால் குளிர்ந்த நீரும், இடது புறம் திருப்பினால் வெந்நீரையும், மேலிருந்து நீரைச் சொரியும் குழாய்களும் இருக்கின்றன. அது குளிர்மிக்க நாடாகையினால் குளிர்காலத்தில் 4 டிகிரி வெப்பம் என்பது சாதாரணம். வெயிலடித்தாலும் வெப்பம் இல்லை. குளிராகவே இருக்கும். எவரும் காலுறை, காலணி இல்லாமல் வெளியே போக முடியாது.

**விளைபொருட்கள்**: இவை அளவில் பெரியவை; தோலுள்ள நிலக்கடலை, பச்சைப் பழம், திராட்சை முதலியவை நம் நாட்டிலுள்ளவைகளை விட 2 மடங்கு பெரியவை. சுவையும் குறைவாக இல்லை. ஆரஞ்சு, பேரிக்காய் முதலியவை பெரிய அளவிலும்,நிறையவும் கிடைக்கின்றன. பரந்த ஆப்பிள் தோட்டங்களையும், திராட்சைத் தோட்டங்களையும் செயின்ட் *காதரைனிலிருந்து டொராண்டோ* செல்லும் சாலையின் இருபுறங்களிலும் காணலாம். ஊடறுத்துச் செல்லும் ஆறுகளிலும், கால்வாய்களிலும் சிறுகப்பல்கள் தொழிற்சாலைகளின் செய்பொருட்களை ஏற்றிச்செல்லுகின்றன; தொழிற்சாலைகளி னருகில் உள்ள துறைகளிலேயே பொருள்கள் ஏற்றுமதிசெய்யப் படுகின்றன. பழங்களை வாங்குவோர் தோட்டத்தினுள்ளேசென்று தேவைப்படும் எண்ணிக்கையில் அவற்றை மரங்களிலிருந்து பறித்து, வெளியிலுள்ள அலுவலரிடம்காட்டி, நிறுத்து, கிரயத்தைக் கொடுத்தல் வேண்டும். தயிர், பால், வெண்ணெய் முதலியவை பெரிய அளவிலும், சுத்தமாகவும் கிடைக்கின்றன. மா அரைக்க, ஆடைகளை வெளுத்து, உலர்த்த, சமையல்செய்ய, வீடு துப்புரவு செய்ய கருவிகள் இருக்கின்றன. பணியாட்கள் இல்லை. காய்கறி, பழம் விற்கும் கடைகள், துணிக்கடைகள், மின்கருவிக்கடைகள், யாவும் ஒரே வளாகத்திலிருக்கின்றன.

***நயாகரா அருவி*** : கனடாவில் காணத்தக்க இந்த அருவியில் குற்றால அருவிபோல் நீர் முழுவதும் ஒரே

தொகுதியாக மிக உயரத்திலிருந்து பேரொலியோடு விழவில்லை. அது மட்டமாக உள்ள பாறையில் பரந்து, மடிந்து விழுகிறது; இதற்கு செயின்ட் காதரைனிலிருந்து 10 மணித்துளிகளில் உந்து வண்டியில் செல்லலாம். ஒரு கிலோமீட்டர் தொலையில் வரும் போதே, மடிந்துவிழும் அருவியிலிருந்து எழும் நீர்த்திவலைகள் புகைபோல மேலே எழுவதைக் காணலாம். பரந்து விழும் அருவியை அடர்ந்த மரத்தின் கூட்டம் இரண்டாகப் பிரிக்கிறது. அதன் வழியே அமெரிக்காவையும் கனடாவையும் பிரிக்கும் எல்லை இருக்கிறது. மேற்கிலுள்ள சிறிய பகுதி அமெரிக்காவுக்கும், கிழக்கிலுள்ள பெரிய பகுதி கனடாவுக்கும் உரியவை. எவரும் அருவியினருகில் செல்லவோ, நீராடவோ இயலாது. அருவியை நயாகரா ஆற்றின் உயர்ந்த கரையிலிருந்து பாதுகாப்புச் சுவரினருகில் நின்று காணலாம். யாவரும் அங்கு சென்று கண்டும், உணவகங்களில் தங்கியும் விளையாட்டு வெளிகளில் விளையாடியும் பொழுது போக்குகின்றனர். அருவிக்கரை, பூங்கா, சாலை ஆகிய எல்லாப் பொதுஇடங்களிலும் ஒரு காகிதத்துண்டையோ, நீர்த்திவலைகளையோ காணுதலியலாது. அதற்காக அவர்களைப் பாராட்டவே வேண்டும். நாம் பொது இடங்களைத் தூய்மையாக வைத்து கொள்ள முயன்றாலும், மற்றவர்களின் உதவியின்றி அவ்வாறு செய்தலியலாது. நீண்ட தூரம் செல்வோருடைய வசதிக்காக ஆங்காங்கே உணவகங்களும், ஒதுங்குமிடங்களும் இருக்கின்றன. நயாகரா ஆறு ஈரி என்னும் ஏரியில் தோன்றி, அருவியாக மடிந்து விழுந்து, சமதரையில் சென்று செயின்ட் லாரனஸ் ஆற்றில் கலந்து அட்லாண்ட்டிக் கடலை அடைகிறது.

**மருத்துவம்** ; மருத்துவப் பரிசோதனை செய்தற்கு மருத்துவரிடம் முன்னேற்பாடு செய்து அவர் குறிக்கும் நாளில், நேரத்தில் போய்க் காத்திருத்தல் வேணடும். அங்கு ஒளிக் கதிர் படம் எடுத்து அவர் பார்த்து மருந்துகளை எழுதிக்கொடுக்கிறார். எனக்குத் தலையில் உள்ள இரத்த ஓட்டத்தை ஒரு கருவியினுதவியால் அளந்து, நெஞ்சையும் பரிசோதித்து, என்னுடைய ஆசிரியத்தொழில், ஓய்வுக் காலப் பொழுதுபோக்கு

முதலியவற்றை முற்றிலும் கேட்டறிந்து மருந்துகளைத் தீர்மானித்த ஜெர்மன் மருத்துவர் நோயாளிகளைப் பரிசோதித்துப்பழகும் பாங்கு குறிப்பிடத்தக்கது.

***டொராண்ட்டோவில் பிள்ளையார் ; திருக்குறள் ஓசை :*** டொராண்ட்டோவில் ஒரு பகுதியில் ஒரு பிள்ளையார் கோவில் எழுப்பப்பட்டது; பின்னர் பிற தெய்வங்களுக்கும் அருகில் சிறுகோவில்கள் கட்டப்பட்டன. அந்நகரத்திலும். அருகில் உள்ள இடங்களிலும் வாழும் இந்துக்கள் அங்கு வந்து வழிபாடு செய்கின்றனர் டொராண்டோவில் ஜெரார்ட் தெருவில் சென்றபோது ஒரு நகைக்கடையிலிருந்து திருக்குறள் கடவுள் வாழ்த்துப்பாடல்கள் ஒலிநாடாவில் பாடப்படுவதைக் கேட்டு வியப்பும் மகிழ்ச்சியும் அடைந்தேன். ஊன்றிக் கவனித்தபோது அது இலங்கைத்தமிழர்கள் வாணிபம் செய்யும் தெரு என்று தெரிந்தது. அவர்கள் மலையாளத்தாரைப் போன்ற ஒலியுடன் தமிழ் பேசுகின்றனர். நான் தமிழ்நாட்டிலிருந்து வந்துள்ளேன் என்று அவர்கள் அறிந்து மிகவும் மதிப்புக் கொடுத்து. அன்புடன் அளவளாவினர். நகை வணிகம். துணிவணிகம். சைவ. ஊன் உணவு. மதுவகைகள் வழங்கும் தொழில். காய்கறி விற்பனை முதலியவற்றில் அவர்கள் ஈடுபட்டுள்ளனர். மூன்று திரையரங்குகளை நடத்துகின்றனர். அவற்றில் தமிழ்த் திரைப்படங்களையே திரையிடுகின்றனர். தமிழிலும். ஆங்கிலத்திலும் நாளேடுகள் விற்பனையாகின்றன.

அடுத்து தெற்கில் உள்ள சிறிது வெப்பமான அமெரிக்க நாட்டில் உள்ள கூட்டாட்சித் தலைநகரமான வாஷிங்ட்டன். நியூயார்க். கென்ட்டக்கி மாநிலத்தில் உள்ள பைக்வில். கனகடிகட்டில் உள்ள ஈஸ்ட லைம். மஸ்ஸாச்சு செட்சில் உள்ள பாஸ்ட்டன் துறைமுகம் முதலியவற்றைப் பார்த்தற்கு உந்து வண்டியிலேயே நெடுந்தொலைவு சென்றோம்.

(தொடரும்)



உ

# ஆறுபடைவீடும் இருதேவியரும்

**பேரறிஞர் ந. சுப்ரமண்யன்**

முருகற்குப் படை வீடுகள் ஆறு என்ப. அவனோடு தொடர்புடைய பலவற்றினையும் பண்டைக்காலம் தொட்டு ஆறு என்னும் எண்ணிட்டு வழங்கும் மரபினை யாவரும் அறிவர். அவனை வழிபடுவார் வழங்கும் தூயபெயர் ``நமக்குமாறாய`` என்று ஆறெழுத்தில் அமையும். அவன் திருமுகங்கள் ஆறு. அவன் உறைவிடங்களும் ஆறு. அவனைப் பாலூட்டி வளர்த்த கார்த்திகை மாதரும் அறுவர். ஈதென்னை? என்பதோர் கடா. இக்கடாவினை எழுப்பினோர் சிலர் இருப்பினும் அதற்கு விடைகாண முற்பட்டோர் ஒருவரும் இலர் என்று காண்கிறது. மேற் கூறிய ஆறு என்னும் தொகையோடுபட்ட பலவற்றுள்ளும் அவனது படைவீடுகள் ஆறு என்னும் கோட்பாட்டினை மட்டும் ஈண்டு மேற்கொண்டு ஆய்வுசெய்வான் பிறந்தது இக்கட்டுரை.

``படை வீடு`` என்னும் சொற்றொடர் போர்ப் படைகள் (வீரர்கள்) உறையும் இடம் ( Military camp, barrcks) என்று பொருள்படும். அஃதாயின் முருகன் உறையும் இடங்களாகக் கூறப்படும் திருப்பரங்குன்றம், திருச்சீரலைவாய், பழமுதிர் சோலை முதலிய இடங்கள் யாவையும் போர்க்களத்தருகிருக்கும் பாசறைகள்தாமோ? மற்றும் அவன் திருமணக் கோலத்தோடு திகழ்தரும் தலங்களையும் படைவீடுகள் எனல் வேண்டுமோ? அவற்றை அவனது வெறும் உறைவிடங்கள் எனல் சாலாதோ? என்னும் ஐயங்கள் எழுகின்றன.

மேலும், முருகனது படைவீடுகள் எனப்பெறும்

இடங்களை அவை யாவை என்று சங்ககாலப்புலவர்கள் போன்ற பண்டைச் சான்றோர்களில் ஒருவரும் குறிப்பிடவில்லை என்பது காணத்தகும். தொல்காப்பியரும் அவன் ஆட்சி செலுத்துமிடம் மலையும் மலைசார்ந்த இடமும் என்று மட்டும் குறிப்பிட்டார். நக்கீரனார் இயற்றிய திருமுருகாற்றுப் படையில் சில இடங்கள் பெயரோடு குறிப்பிடப்படுகின்றன என்பது உண்மையே. ஆயினும்அப்பாடலில் முருகனது உறைவிடங்கள் குறிக்கப் பெறும் முறையினைக் காண வேண்டும். திருப்பரங்குன்றம். திருச்சீரலைவாய் (திருச்செந்தூர்). திருஆவினன்குடி. திருஏரகம் மற்றும் பழமுதிர்சோலை என்பவை நிரலே குறிப்பிடப் படுவதுடன். திருவேரகத்திற்கும் பழமுதிர்சோலைக்குமிடையே. முருகன் எக்குன்றின் மீதும் எழுந்தருளியிருப்பதைக் குறிக்கும் வகையில் "குன்றுதோறாட"லும் கூறப்படுகின்றது. அப்பாடலை ஓதுவார் ஆய்வார் யாவரும் அதன்கண் நக்கீரனார் முருகனது உறைவிடங்களை ஆறென்று எண்ணிக் கூறினார் என்றும். அவை 1) திருப்பரங்குன்றம் 2) திருச்சீரலைவாய் 3) திருஆவினன்குடி 4) திருவேரகம் 5) குன்றுதோறாடல் மற்றும் 6) பழமுதிர்சோலை (அழகர்மலை) என்னும் ஆறுபடைவீடுகள் என்றும் கூறா நிற்பர். நாம் ஈண்டுக் கருதவேண்டியது யாதெனில்.மேற் கூறிய ஆறு இடங்களில்திருப்பரங்குன்றம், திருச்சீரலைவாய், திருவாவினன்குடி. திருவேரகம். பழமுதிர்சோலை என்பன மட்டும் தனிப்பட ஒவ்வொரு தலங்களாக இருப்பதும். குன்று தோறாடல் என்பது ஓரிடமன்று எல்லாக் குன்றுகளும் என்று பொதுப்படக் கூறிய ஒன்று என்பதும் வெள்ளிடைமலை போன்றது என்பது "குன்று தோறாட" லையும் சேர்த்து ஆறு "படை வீடு"கள் என்று கூறுவது பொருந்தாது என்பது 'சிறிது உன்னுவார்க்கும் எளிதிற் புலனாகும். ஆகவே திருமுருகாற்றுப் படையில் நக்கீரனார் முருகற்கு ஐந்து தனி உறைவிடங்களே கூறினார் என்றும் அவையேயன்றிப் பிற எல்லாக் குன்றுகளின் மீதும் விளையாடுதல் அவன் சிறப்பு என்றும் கொள்ள வேண்டியது இன்றியமையாததாம்.

நக்கீரனார் முருகற்கு ஐந்து 'தனி'த் தலங்களையும் ஒரு பொதுத் 'தொகை'யினையும் கூறியுள்ளதற்கு உவமை நாம் கருதக் கூடியது திருத்தொண்டர் புராணத்தில் 63 தனி அடியார்களைக் கூறிப் பிறகுத் தொகை அடியார்களைக் கூறியது என்பதேயாம். திருத்தொண்டர்களை எண்ணுங்கால் அறுபத்து மூன்று என்போமேயன்றித் தொகையடியார் ஒன்பதின்மரையும் கூட்டி 72பேர் எனல் மரபன்று. அங்ஙனமே முருகன் உறையிடங்களைக் கருதுங்கால் ஐந்து 'தனி' உறைவிடங்கள் மற்றும் ஒரு'தொகை' இடம் என்று வெவ்வேறாகக் கருதுவதே முறை என்க. இதைவிட்டு நக்கீரனார் முருகற்கு ஆறுபடைவீடுகள் கூறினார் என்று நெடுங்காலமாக அப்பாடலைக் கற்றார், கல்லாதார், கேட்டார், கேட்டுமிலாதார் யாவரும் ஒருங்கே கூறிவருவது யாது பற்றி? மற்றும், அங்ஙனம் கூறுதல் எங்ஙனம் பொருந்தும்?

உண்மையில் நக்கீரனார்-இவரே முதன்முதல் தமிழிலக்கியத்தில் முருகனது தனி உறைவிடங்களை எடுத்து ஓதியவர்-முருகற்கு மதுரையருகிலுள்ள திருப்பரங்குன்றம், பழனி (பொதினி) மலையின் அடிவாரத்திலுள்ள திருஆவினன்குடி, ஏரகம் (இதனைச் சுவாமிமலை என்பர்; இது மலை நாட்டில் உள்ளதாக நச்சினார்க்கினியர் கூறுவர்) மற்றும் இப்போது அழகர்மலை என்று கூறப்படும் பழமுதிர்சோலை ஆகிய ஐந்து தலங்களையே முருகனது தனி உறைவிடங்களாகக் கூறியுள்ளார். இவற்றில் திருப்பரங்குன்றத்திலும் திருஆவினன்குடியிலும் முருகன் மலையடிவாரத்திலேயே கோயில் கொண்டிருப்பதும், திருச்செந்தூரில் மலைமீதல்லாமல் கடற்கரையோரத்தில் எழுந்தருளியிருப்பதும் சுவாமிமலையில் ஒரு மானிடராக்கிய குன்றின் மீது அமர்ந்திருப்பதும் அறியற்பாலன.

திருமுருகாற்றுப்படையில் பொருள்கோள் சொன்முடிவு- கீழ்க்காணுமாறு அமையவேண்டும் என்பது எமது கருத்து:-

முருகனது அருள் பெற்றான் ஒருவன் அவன் அருளைப் பெறவிரும்பினான் ஒருவனை விளித்து :

*(1) "..........................................சேய்*
*சேவடி படரும் செம்மல் உள்ளமொடு*
*நலம்புரி கொள்கைப் புலம்பிரிந் துறையும்*
*செலவுநீ நயந்தனை ஆயின் பலவுடன்*
*நன்னர் நெஞ்சத்து இன்நசை வாய்ப்ப*
*இன்னே பெறுதி நீ.........................................."*
*அவனைக் காண நீ விழைந்தனை ஆயின்*

*(2) "இழுமென இழிதரும் அருவிப்*
*பழமுதிர் சோலை மலைகிழவோன்"*

*(3) "அஞ்சிறை வண்டின் அரிக்கணம் ஒலிக்கும்*
*குன்றமர்ந்து உறைதலும் உரியன்".*
*அதா அன்று*

*(4) "உலகம் புகழ்ந்த ஓங்குயர் விழுச்சீர்*
*அலைவாய்ச் சேறலும் நிலைஇய பண்பே".*
*அதா அன்று*

*(5) "தாவில் கொள்கை மடந்தையொடு சிலநாள்*
*ஆவினன்குடி அசைதலும் உரியன்".*
*அதா அன்று*

*(6) "விரையுறு நறுமலர் ஏந்திப் பெரிதுவந்து*
*ஏரகத் துறைதலும் உரியன்".*
*அதா அன்று*
*"மென்தோள் பல்பிணை தழீஇத் தலைத்தந்து*
*குன்று தோறாடலும் நின்றதன் பண்பே".*

என்று சொல்முடிவு காணவேண்டும். அஃதாவது 'நீ முருகனது அருளைப் பெற வேண்டினையாயின், பழமுதிர் சோலையில் எழுந்தருளியுள்ள அவனைத் திருப்பரங்குன்றம், திருச்செந்தூர், திருஆவினன்குடி, திருவேரகம் ஆகிய இடங்களிலேயே யன்றி எக்குன்றுகள் தோறும் கண்டு கொள்ளலாம்' என்று பொருள்

காணவேண்டும் அவ்வாறாயின் முருகற்கு ஐந்து தனி இடங்களைச் சான்றோர் கூறினார் என்பது போதரும். அவற்றை ஆறு உறைவிடங்கள் என்று கூறி, ஆறாவது இடமாகத் தொகைக் குறிப்பான் பல்வேறு குன்றுகளையும் சேர்த்துக் கூறுவதும், ஆறாவது இடமாகத் தணிகைமலை முதலிய இடங்களைச் சேர்த்துச் சொல்வதும் பிற்காலத்தே மரபறியாதார் கூறுவன என்று விடுக்க.

இஃதேயன்றி, முருகனது உறைவிடத்தைப் 'படைவீடு' என்றது என்னை? அஃது எங்ஙனம் பொருந்தும்? என்று இக்கட்டுரைத் தொடக்கத்திலேயே யாம் எழுப்பிய கடாவிற்கு விடை காணுதல் வேண்டும். 'படைவீடு' என்பது போர்வீரர்கள் தங்கும் பாசறையைக் குறிக்கும் என்பதை மேலே கண்டோம்; அன்றியும் முருகன் தங்கியிருக்கும் எல்லா இடங்களையும் அவனது பாசறையாகக் குறிப்பிடுதல் (அவன் தேவரது படைத்தலைவனாயினும்) பொருந்தாது என்பதையும் கருதினோம். அச்சொற்றொடர் 'ஆற்றுப்படை வீடு' என்னும் நீண்ட தொடரின், மயக்கத்தாற் பிறந்த திரிபு என்க. "திருமுருகாற்றுப்படை" என்பது ''முருகனையடைந்து அவனை வழிபட்டுப் பயனடைய விரும்பிய ஒருவனை அப்பயன் பெற்றார் ஒருவன், அவன் சென்று சேர வேண்டிய இடத்தையும் வழியையும் கூறி ஆற்றுப் படுத்திய செய்கை'' என்று பொருள்படும். 'படை' படுத்தற்றொழிலைக் குறிக்க வந்த தொழிற்பெயர்.
(படு : பகுதி, ஐ . தொழிற்பெயர்விகுதி). அப்படையின் பயன் 'வீடு' பேறு (அன்றி 'வீடு எனலே சாலும்) ஆதலால் அத் தொடரினை ஆற்றுப்படை வீடு என்று விரித்துக்கொள்ளலாம். இவ்''வாற்றுப் படைவீடு'' ஆறுபடைவீடாகக் குறுகி நின்று முருகற்கு ஆறுபடை வீடுகளைத் தேடிக்காணும் முயற்சியில் சிலரை ஈடுபடுத்திற்று. அதன் விளைவுதான் முருகற்கு ''ஆறுபடைவீடு'' என்பதெல்லாம். இம் மயக்கத்தினின்றும் தெளிந்து உண்மை காண்போமாயின் பலகாலும் பேசப்படும்

"ஆறுபடைவீடுகள்" தொடக்கத்தில் ஆற்றுப்படைவீடாக மட்டும் இருந்தது என்பது புலனாம்.

மேற்கூறியவற்றால், முருகன் உறைவிடங்கள் குன்றின் உச்சியுமல்ல, போர்க்களப் பாசறையுமல்ல, அவன் கடற்கரையிலுமிருப்பன், மலைக்குகையிலும் வாழ்வன், மலையடிவாரத்திலும் உறைவன் என்பதே முடிவு என்பது புலனாம். பழனிமலை மீது அவன் பழனியாண்டவனாக இருத்தலோ எனில், அம்மலை மீது (உச்சியில்) கோயில் கொண்டுள்ள கடவுள் முருகப்பிரான் அல்லன்; அவன் தண்டாயுதபாணி (வேலாயுதபாணி அல்லன்) என்பதும், போகர் முதலிய சித்தர்களால் படைத்துக் கொள்ளப்பட்ட வேறு ஒரு கடவுள் என்பதும் அறிதல் வேண்டும்.

கார்த்திகை மாதர் அறுவரால் எடுத்துவளர்க்கப் பெற்ற முருகனுக்குத் திருமுகமும், திருநாமமும் ஆறாக அமைந்து விட்டன. அம்மரபினைத் தொடர்ந்து அவன் உறைவிடங்களை யும் ஆறாக்கவிரும்பியவர்கள் 'ஆறுபடைவீடு'களைப் பற்றிய மரபினைத் தொடக்கி வைத்தனர் என்பது இதனாற் பெறப்படும்.

இனி, முருகற்கு இருமனைவியர் கூறுதல் பௌராணிக மதம். அவர்களை வள்ளியம்மை என்றும் தெய்வயானை யென்றும் வெவ்வேறு பௌராணிக மரபுகளால் தோற்றுவிக்கப் பெற்ற இருவராகச் சமயவரலாறு அறியும். வள்ளியம்மை முருகனது குறிஞ்சி நிலக் கேண்மைக்கு ஒத்தமனைவி, தெய்வயானை இந்திரனது மகள் என்பதும் அவளே முருகனது மூத்த மனைவியாள் ஆயினள் என்பதும் வடமொழி ஸ்காந்தம் முதலிய புராணங்களின் கோட்பாடு. இவற்றின் உண்மைநிலையை உணர்தல் வேண்டும். வள்ளியம்மை திருத்தணிகையருகில் சிற்றரசோச்சிவந்த ஒரு வேட்டுவத் தலைவனால் வள்ளிக்கொடி படரும் ஒரு படுகையில் கண்டெடுக்கப் பெற்றாள் என்றும் அவள் ஒரு மான் வயிற்றிற் பிறந்தவள் என்றும் தமிழ்ச்சம இலக்கிய மரபு கூறும். அவள் குறிஞ்சி நிலத்துப்பிறந்து

அந்நிலத்துக்குரிய முருகனால் களவொழுக்கத்தில் வதுவை செய்து கொள்ளப்பட்டவள் என்பது குறிஞ்சித்திணையின் இலக்கணத்திற்குப் பொருத்தமானதே. ஆதலால் கச்சியப்ப முனிவர் தமது தணிகைப் புராணத்தில் அந்நிகழ்ச்சிக்கு ஓர் கோவையே பாடியமைத்திருப்பது மிகவும் பொருத்தமுடைத்தே. ஆயினும் அவ்வம்மையின் வள்ளி என்னும் பெயர் நேரடியாக ஒரு கொடியின் உவமை பற்றித் தரப்பட்டது என்னாமல் படுகையில் கண்டெடுக்கப்பட்டவள் என்று கூறியிருக்க வேண்டா. அன்றியும் அவளுக்கும் மானுக்கும் இருந்திருக்கக் கூடிய உறவு அவள் கண்களும் அவற்றின் மடப்பம் பொருந்திய பார்வையுமே எனல் சாலும் என்க.

ஈதிவ்வாறாக இரண்டாவது கூறப்படும் மனைவி வடமொழிப்புராணங்களின் படைப்பு. ஒரு உருவகமாகக் கருதப் பெற்றதை உண்மை நிகழ்ச்சியாக மயங்கித்திரித்துக் கொள்ளப்பட்ட பௌராணிக வரலாறு இது. அஃதாவது. முருகனை சுப்ரமண்யக் கடவுளாக வரிந்து கொண்டபின் அவனது படைத்தலைமைத் தொழிலுக்கேற்ப. அப்பௌராணிகமரபு. அவனைத் தேவர்களின் அரசனான இந்திரனது படைத்தலைவனாக நியமித்துக் கொண்டது. அஃதாவது முருகன் தேவசேனையின் அதிபதி ஆயினன். தேவசேனாபதி என்னும் பெயர் குறுகித் தேவசேனையாகிப் பிறகு திரிந்து தேவயானைய மருவிற்று. அதன் தலைவனை அதன் கணவராக்குவது பிறகு எளிதாயிற்று. இவ்வாறே முருகன் தேவயானையை மனைவியாகப் பெற்றனன். ஆகவே ஒருமனைவி குறிஞ்சிநிலக் களவொழுக்கத்தாலும் இன்னொரு மனைவி பௌராணிக உருவகத்தாலும் முருகற்கு அமைந்துள்ள னர் என்பது காண்க.

# அப்பர் தேவாரத்தில் சமுதாய உணர்வு

பேரறிஞர் அ.மா. பரிமணம்.

தமிழில் இன்று சமூகம், சமுதாயம் (Society) என்று வழங்கப்படும் சொற்கள் "மக்கட்டொகுதி" எனப்பொருள்படும். இதே பொருளில் பைஞ்ஞிலம், மன்பதை என்று சங்க காலத்தில் வழங்கப்பெற்ற சொற்கள் இக்காலத்தே வழக்கு வீழ்ந்தமை கொண்டு, காலப்போக்கில் தமிழில் நிகழ்ந்த பிறமொழித் தாக்கத்தினை உய்த்துணர்தல் கூடும். சங்க காலத் தமிழில் சமுதாயம் நயத்தகு நாகரிகமும் வியத்தகு பண்பாடும் கொண்டு விளங்கியதனைச் சங்க இலக்கியங்கள் தெளிவுற உணர்த்து கின்றன. அவற்றை வரலாற்றாசிரியர்களும் தயக்கமின்றி ஒப்ப முற்பட்டுள்ளனர். சங்க காலத்தை அடுத்துக் காப்பியக் காலமும், அதனை அடுத்துப் பக்தி இயக்கம் தோன்றித் தழைத்த சமய மறுமலர்ச்சிக் காலமும் தோன்றிதை, இலக்கிய வரலாற்றாய்வாளர் நன்கு காட்டியுள்ளனர். சங்க காலத்திற்கும் பக்தி இயக்கக் காலத்திற்கும் இடைப்பட்ட (3-7 நூற்றாண்டு) காலத்தில், களப்பிரர். பல்லவர் போலும் அந்நியர் ஆட்சிகளால், தமிழக அரசியலிலும் சமயவியலிலும் பல மாற்றங்கள் நிகழ்ந்துள்ளன. கி.பி. ஏழாம் நூற்றாண்டில் சைவசமய வழிநின்று பக்தி இயக்க முன்னோடிகளுள் ஒருவராயிலங்கிய திருநாவுக்கரசர் தம் வாழ்வாலும் வாக்காலும் தமிழ்ச் சமுதாயத்திற்கு ஓர் அரணாகத் திகழ்ந்தார். அப்பர் எனப் போற்றப்பெறும் அவர்தம் திருவாக்காய தேவாரத்தால் அறியலாகும் சமுதாய உணர்வை உணர்வதற்குச் சங்ககால, அப்பர் காலச் சமுதாயச் சூழலை உணர்ந்துகொள்வது இன்றியமையாததாகும்.

சங்க காலம் முடியாட்சி நிலவிய காலம். மன்னன் உவந்து நோக்கினால் பொன் பூக்கவும், சினந்து நோக்கினால்

எரிதவழவும் செய்யும் என்று மக்கள் அவன் ஆற்றலைப் புகழ்வர். மாயோன், சேயான், நீலமணிமிடற்றோன் என்று தெய்வங்கள் சில பரவப்பெற்றன. மறுபிறப்பு இல்லையென்போரும் இருந்துள்ளனர். பரம்பொருளை உடன்படாத புத்தம், சமணம் ஆகிய கோட்பாடுடையார் இருந்துள்ளமைக்கான சுவடுகளைக் காணலாம். எனினும் தெய்வம் காரணமாக மாறுபட்டு, முரணிப்போரிடும் நிலைமையைக் காணக்கூடவில்லை. தெய்வம் கருப்பொருள்களுள் ஒன்றாக - முதற்கண் மொழிந்து பேசப்பெறும் ஒன்றாக விளங்கிய பாங்கினைத் தொல்காப்பியத்துட் காணலாம். பொதுவாகக் கூறுவதாயின் "சங்க காலத் தமிழர் வாழ்வு கடவுளை மையமாகக் கொண்டதாக (God centered) அமையாமல் மானுடத்தை மையமாகக் கொண்டதாக (man centered) அமைந்தது எனலாம்."

காப்பியக் காலங்களில் இந்நிலையே தொடரக் காணலாம். புகார் நகரத்தில் பல்வேறு சமயச் சார்புடையோரும், அவர்கட்கான வழிபாட்டிடங்களும் விளங்கியதைச் சிலம்பு உணர்த்தும். வேதநெறி போற்றும் மாங்காட்டு மறையவன், சமணநெறி போற்றும் கவுந்தியடிகள் ஆகியோர் உரையாடலில், அவர்கள் தத்தம் சமயக்கோட்பாட்டில் கொண்டிருந்த உறைப்பையும், அதுகொண்டு அவர்கள் தம்முட் பகைக்காது, செயற்பட்ட பாங்கையும் உணரலாம். செங்குட்டுவன் "செஞ்சடை வானவன் அருளினில்" (சிலப்,26,98) தோன்றியவன் என்பதனை இளங்கோ கூறுவர். அவன் வடநாடு செல்ல முற்பட்டபோது, தன் திருமுடியில், சிவன் சேவடியை வஞ்சி மாலையொடு அணிந்து யானை மீதிவர்ந்து செல்லுங்காலை ஆடகமாடத்திலிருந்து திருமாலின் சேடங்கொடு வந்து சிலர் ஏத்துகின்றனர். சிவன் சேவடி சென்னி வைத்தமையால், அதனைத் தன் அணிமணிப் புலத்தே தாங்கிச் சென்றான் என்று கூறப்பட்டமைகொண்டு செங்குட்டுவனது சமயக் காழ்ப்பின்மை

-யை உணரமுடிகிறது. சைவச் செங்குட்டுவனையும், சமண இளங்கோவையும், புத்தச் சாத்தனாரையும் ஒருங்கிருத்திக் காட்டும் "காட்சிக் காதை" அக்காலத்தே தமிழகத்தில் நிலவிய சமயப் பொறையுடைமைக்குச் சான்றாகின்றது எனலாம். பிற சமய உண்மைகளையும், அவற்றிற்குக் கூறப்படும் மறுப்புக்களையும் அறிந்து, தம் சமயக்கொள்கைகளில் உறுதிகொண்டு ஒழுகிய மக்களை மணிமேகலை காட்டுகின்றது.

இந்நிலைக்குச் சில நூற்றாண்டுகள் கழித்து அப்பர் சம்பந்தர் போலும் சைவ அடியார்களும், வைணவ அடியார்களுட் சிலரும் தோன்றிய காலத்தில் (கி.பி 7 ஆம் நூற்றாண்டிற்குச் சற்றே முன்னரும் பின்னருமாகிய காலம்) தமிழக அரசியலிலும் சமயவியலிலும் குறிப்பிடத்தக்க மாறுதல்கள் தோன்றியிருந்தன. தொண்டை மண்டலப் பகுதியில் பல்லவர்களும், சோழ பாண்டியப் பகுதிகளில் முறையே சோழ பாண்டிய மரபினரும் ஆட்சி செய்யச் சேரநாட்டுப் பகுதியில் இருந்த நிலைபற்றித் தெளிவாக அறியவியலாத நிலை ஏற்பட்டது. ஒரு காலக்கட்டத்தில் காஞ்சிப் பல்லவனும் மதுரைப் பாண்டியனும் சமண சமயம் சார்ந்தவர்களாகத் திகழ்ந்தமையினைப் பெரிய புராணம் புகல்கின்றது.

வேள்வியுள் உயிர்க்கொலை, மக்களுள் வருணபேதம் போன்றவற்றை அடிப்படையாகக் கொண்ட வைதிக சமயம் இந்து சமயம் எனும் பெயரில் வடக்கே பெற்றிருந்த செல்வாக்கினை எதிர்த்துப் புத்தம் சமணம் ஆகிய சமயங்கள் தோன்றிப் பெருமளவில் மக்களிடையே ஆதரவு பெறலாயின. தமிழகத்தே தோன்றியனவென்று கருதப்பெறும் சிவநெறியையும் மால்நெறியையும் வைதிக சமயம், இந்து மதம் எனும் பொதுப்பெயரில் தம்மொடு பெருமளவில் இணைத்துத் தமிழகத்தில் தழைக்கலாயிற்று. தமிழகம் போந்த புத்த சமண சமயங்கள் கொல்லாமை, பிறப்பொக்கும் பாங்கு போன்றவற்றைப் பறைசாற்றித் தமிழக மக்களைத் தன் சூழ்வில்

தொகுத்த சமணமும் காலப்போக்கில் தன் கோட்பாடு களினின்றும் வழுவிப் பிழை புரிவதாயிற்று. இத்தகு சூழலில் சைவமும் வைணவமும் சேர்ந்த வைதிகநெறி, புத்தநெறி, சமணநெறி ஆகிய மூன்றும் தமிழக மண்ணில் தம் ஆதிக்கத்தை நிறுவவும் வளர்க்கவும் பெரும் போராட்டங்களில் ஈடுபடலாயின. விளைவாக வைதிக நெறிக்கு இறக்கமும், பௌத்த நெறிக்கு வீழ்ச்சியும், சமண நெறிக்கு அரசு ஆதரவால் ஆக்கமும் அமையலாயின. வைதிக இறக்கத்தால், சைவ நெறியும் வைணவநெறியும் தாம் தாம் தோன்றிய மண்ணில், தாழ்நிலை எய்தின. சைவம் தாழ்நிலையிலிருந்து மீட்பெய்த- மறுமலர்ச்சியெய்த - உதவத்தக்க உத்தமர்களை எதிர்நோக்கிய நிலையில், அதன் மீட்பர்களாக அப்பரும் சம்பந்தரும் அவதரித்தனர்.

வைதிகம், புத்தம், சமணம் ஆகிய சமயங்கட்கிடையே தமிழகத்தில் நடைபெற்ற வாழ்வுப் போராட்டம் (struggle for existence) ஒரு மும்முனைப் போராட்டமாகவே அமைந்தது. அதில் முதற்கண் களத்திலிருந்து அகற்றப்பட்டது புத்த சமயமேயாகும். எஞ்சியநிலையில் சைவ வைணவம் உள்ளிட்ட வைதிகம் ஒரு பக்கமும், சமணம் ஒருபக்கமுமாகப் பெரும்பாலும் அமைந்தது. சேர நாட்டு நிலை அறியஇயலாத நிலையில், தொண்டை நாடு பாண்டியநாடு ஆகியவற்றில் அரசுகளின் ஆதரவால் சமணம் ஓங்கியும், சைவ வைணவம் மெலிந்தும் விளங்கிய நிலையில் சோழ நாடும் தொண்டை நாடும் சைவத்தை வளர்க்கவும், சமணத்தை வீழ்த்தவும் இது பெரும் அருளாளர்களைத் தோற்றுவித்தது குறிப்பிடத்தக்கது.

சைவ சமயம், சிவன் என்னும் பரம்பொருளை முழுமுதலாகக் கொண்டது, ஒருவன் செய்யும் வினைப்பயன் இறையருளால் செய்தவனை அடையும் என்பது அதன் அடிப்படைக் கோட்பாடுகளில் ஒன்று. இதற்கு மாறாகச் சமணம், இறைவன் என்று ஒருவன் இலன் என்றும், ஆனால் வினை தானே சென்று செய்தவனை அடைந்து பயன் நல்கும் என்றும்

கூறும் அடிப்படை கொண்டது. சமணத்தை வென்று சைவம் தழைக்க வேண்டுமாயின், மக்களிடமும், மன்னர்களிடமும் இறையுண்மையையும், இறை பக்தியையும் தோற்றுவித்து வளர்ப்பதும், மக்களை இறைவன்பால் ஈடுபடச் செய்வதும் இன்றியமையாதன என்பதனைச் சைவசமயக்குரவர்கள் உணர்ந்து செயல்பட்டனர். அவர்களுடைய செயன்முறை பக்தியை வளர்க்கும் ஓர் இயக்கமாகவே அமைந்தது. அவர்கள், தம் வாழ்வாலும் வாக்காலும் இறையுணர்வை, மக்களிடையே தம் காலச் சமுதாயத்திடையே - உண்டாக்குவதனைக் கடமையாகக் கொண்டனர். அதன் பயனாக, அற்றைத் தமிழகத்தில், சைவமலர்ச்சியாம் உதயத்தையும், சமய வீழ்ச்சியாம் அத்தமனத்தையும் காண முடிந்தது. இந்தப் பணியில் அப்பரின் பணி முன்னோடியாகவும் பயன்மிக்கதாகவும் அமைந்தது.

அப்பர் தருமசேனராக விளங்கிய நிலையில், குடரோடு தொடக்கி முடக்கியிடுமாறு எய்திய சூலைநோயும், அது சமணத் தலைவர்களின் மந்திர மருந்துகளால் நீங்காமையும், தமக்கையார்பால் மீண்டபோது அவர், "திருவாளன் திருநீறு"அளிக்க ஏற்றுப்புனைந்து, ஏறுார்ந்தான் திருக்கோயில் புக்கிறைஞ்சிப் பதிகம் பாடிய அளவில் அந்நோய் நீங்கியமையும் கொண்டு அவர் இறையுண்மையையும் அவனது அருள்நிலையையும் உணர்ந்து அதில் உறைப்புக்கொள்ளும் பாங்கினைப் பெற்றார். அவர் சைவராகி நோய் நீங்கப்பெற்றமை உணர்ந்த சமணத் தலைவர்கள், தாமும் தம் சமயமும் நிலைபெறுதல் வேண்டி வஞ்ச நெஞ்சொடு, மன்னனை அணுகி அவனால் செய்விக்கப்பட்ட, நீற்றறை நிகழ்வு, நஞ்சூட்டல், களிற்றை இடறுமாறு ஏவுதல், கல்லொடு பூட்டிக் கடலிவிடுதல் போன்ற கொடுமைகளின்றும், தப்பியமை கொண்டு, அப்பரேயன்றி, சமணர்களும் சமணம் சார்ந்த மன்னரும், ஏனைய மக்களும் இறையுண்மையையும் இறையருளாற்றலையும் உணர்ந்தனர். மன்னன் மனந்திருந்திச்

சைவஞ் சார்ந்தான். இந்த இறையருட் செயலைச் சமுதாயம் முழுதும் உணர்ந்து உய்தல் வேண்டும் என்னும் உணர்வால் அப்பர், பதிகநெறியையும், தொண்டு நெறியையும் தொடங்கி வருவாராயினார்.

தமக்கையாருக்கென மணம் பேசப் பெற்ற இளைஞர் போர்க்களத்தே உயிர்நீத்தமை, நோயினால் தந்தையார் இறந்தமை, ஆற்றொணாத் துயரால் அவருடைய தாயார் உயிர்நீத்தமை ஆகியவற்றால் நிலையாமை உணர்வு நிலைபெற்ற உள்ளத்தினராய்த் தமக்கையாரின் தயையால் உயிர்வாழும் மருள்நீக்கியார் (அப்பரின் இளம் பருவப்பெயர்) ஆற்றிய அறச்செயல்கள் காலப்போக்கில் சமணஞ்சார்ந்து, சைவத்திற்கு மீண்ட பின்னர் மேற்கொண்ட தொண்டு நெறிக்கு அடிப்படையாக அமைந்தன. அவர், "காசினிமேல் புகழ் விளங்க நிதியளித்துக் கருணையினால், ஆசில் அறச்சாலைகளும் தண்ணீர்ப் பந்தரும்" அமைப்பாராயினார் (பெரிய புராணம் திருநாவு.35). மேலும், கா வளர்த்தல், குளம் அமைத்தல், தன்னடைந்தார்க்கு வேண்டுவன அளித்தல், விருந்தோம்பல், நாவலர்க்கு வளம்பல நல்கல் போன்றவற்றைச் செய்ததோடு "நானிலத்தோர் யாவருக்கும் தவிராத ஈகை வினைத்துறை நின்றார்"என்று சேக்கிழார் கூறுகின்றார். இவர் இளமையிலேயே மனிதநேயம் மிக்குச் சமுதாய உணர்வு சான்றவராக இருந்துள்ளார். அதனால், "பணிசெய்யின்" என்று தமக்கையார் பணித்தவுரையினை ஏற்று, ''மனத்தொடு வாய்மையுடன் மெய்யுற்ற திருப்பணி செய்பவராய் "தியானம் அறா வுணர்வும் ஈறின்றிஎழும் திருவாசகமும், கையில் திகழும் உழவாரமுடன் கைக்கொண்டு'', தம் பக்தி நெறியையும் தொண்டு நெறியையும் தொடர்ந்தார்.

அப்பர் பாடல்களைத் தன்னுணர்வுப் பாடல்கள், பிறர் குறையைத் தம் மீது ஏறட்டுக்கொண்டு பாடிய பாடல்கள், பிறர்க்கு அறிவுறுத்தும் பாடல்கள், இறைபுகழ் இயம்பும் பாடல்கள் எனப் பகுத்துக் காணலாம். எவ்வகைப்

பாடலாயினும் அவை பயில்வோரைக் கனிவித்துப் பண்படுத்தி இறைநெறிச் செலுத்தும் பாங்கினவாகும். அப்பதிகங்கள், அடியார்கள் குழாமாகக்கூடிப் பாடுதற்கமைந்தனவாதலின், ஊரூர் தோறும் பாடப்பட்ட அவை, படிப்பவர்களிடையே ஊர்ப்பற்றும் இறைப்பற்றும் ஒருங்கே தோன்றக் காரணமாயின. அடிகள் மேற்கொண்ட பதிகப் பெருவழியும், உழவாரத் தொண்டுநெறியும் தமிழ்ச் சமுதாயத்தை இறைநிலைக்கு இட்டுச்செல்லும் வாயில்களாயின. திருவங்கமாலை எனும் பதிகம், அடிகள் தம் உறுப்புக்களை விளித்துப் பாடியதாயினும், பயில்வோர் அனைவரும் தத்தம் உறுப்புகளை விளித்துப் பாடிப் பயன்கொள்ளுமாறமையக் காணலாம்.

சமணர் செய்த கொடுமைகளினின்றும் மீண்ட பின்னர் இறையருள் வலம் தமக்கிருப்பதறிந்தும், கொடுமை செய்தார் மீது சினங்கொள்ளாத பொறுமையுணர்வும், பகைவன் வஞ்சத்தை நீக்கத் தாமே முற்படாது இறையருள் வேண்டிப் பழையாறையில் உண்ணாநோன்பு கொண்ட மறஎதிர்ப்புணர்வும், "மாளும் இவ்வுடல் கொண்டு மீளேன்" எனக் கைலைச் செலவில் கொண்ட உறுதிப்பாடும், நாமார்க்கும் குடியல்லோம் என நவிலும் அஞ்சாத்தன்மையும் போல்வன அப்பரின் தனிப்பண்பு களாயினும் அறவழிப்பட்ட சமுதாயத்திற்குத் தேவையாகும் பண்புகளேயாகும்.

'தொண்டலால் துணையுமில்லை' என்பதில் உறுதிகொண்ட அடிகள், சைவ சமயத்தில் நின்று கூறிய "என்கடன் பணி செய்து கிடப்பதே" என்னும் குறிக்கோள் வாசகம், மக்கள் எச்சமயத்தவராயினும் தம்வாழ்வில் மேற்கொண்டு பயன்பெறுதற்கமைந்த அருண்மொழியாகும். அதில், சமயங்கடந்தும் ஒளிர்கின்ற சமுதாய உணர்வினைக் காணலாம்.

அப்பரைப் பொறுத்தமட்டில் சமுதாயமென்பதனைத் தமிழ்ச் சமுதாயமாகவே கொள்ளுதல் வேண்டும். மருள்

நீக்கியார், தருமசேனர், திருநாவுக்கரசர் என்னும் மூன்று நிலையிலும் அவர் தமிழ்ச் சமுதாயத்தைச் சேர்ந்தவரேயாவார். அவர் மெய்ம்மையுணர்ந்து சைவத்திற்கு மீண்டநிலையில் அவரது சமுதாய உணர்வு, புரைபடும் பொய்ச் சமயங்களின்றும் தமிழ்மக்களைக் காப்பதையும், வைதிகப் பிணைப்பால் சைவ சமயத்தில் வேரூன்றிய சில சடங்குகள், நம்பிக்கைகள் சாதிப் பிணக்குகள் ஆகியவற்றிலிருந்து தமிழ் மக்களைக் காப்பதையும் கடமையாகக் கொண்டது.

அப்பரின் சமண எதிர்ப்பு, மேலோட்டமாகக் காணுங்கால், அத்தலைவர்களை எதிர்ப்பதுபோலக் காணப்பட்டாலும், ஆழ்ந்து காணுங்கால் அச்சமயக் கோட்பாட்டின் குறைபாடுகளையும், நடைமுறை வழக்கங்களின் இழிவுபாட்டையும், கொள்கைக்கும் கொண்ட ஒழுக்கத்திற்கும் இயையாத செயற்பாட்டையும் தாக்குவதாக அமையக் காணலாம். சேக்கிழாரும் "கொல்லாமை மறைந்துறையும் அமண் சமயம்'', ''கொலைபுரியா நிலை கொண்டு பொய்யொழுகும் அமண்குண்டர்" என்றும் குறிப்பிட்டுள்ளார்.

வைதிக சமயத்தின் வயப்பட்ட சைவ சமயத்தில், சாத்திரச் சழக்கும் கோத்திர வழக்கும், வேண்டாச் சடங்குகளும், நம்பிக்கைகளும் இடம் பெற்று மக்களை அலைக்கழித்தன. அவற்றின் பொய்ம்மையையும் பொருந்தாமையையும் எடுத்துக் காட்டித் தமிழ்ச் சமுதாயத்தின் சமய வாழ்வியலைச் செம்மைப் படுத்தும் கடமையை அப்பர் தம், பதிக நெறி வாயிலாக மேற் கொண்டார். புறவயப்பட்ட சமண எதிர்ப்பினும், அகவயப்பட்ட வைதிக எதிர்ப்பு வலிமை வாய்ந்திருப்பது இன்றியமையாதது.

சாத்திர அடிப்படையில் சாதி உயர்வு தாழ்வு பேசிய கூட்டத்தைக் கடிந்து காட்டவேண்டியுள்ளது.

*"சாத்திரம்பல பேசும் சழக்கர்காள்*
*கோத்திரமும் குலமும் கொண்டு என்செய்வீர்"*

(அப்பர் 5-60-3)

இது வைதிகத்தை எதிர்த்துச் சாடிய வலிமைமிக்க உரையன்றோ!

*"வேதமோதிலென் சாத்திரம் கேட்கிலென்*
*நீதிநூல் பல நித்தல் பயிற்றில் என்*
*ஓதி அங்கம் ஓராறும் உணரில் என்"* (அப்பர் 5-99-4)

இந்த வினா உண்மையான இறையுணர்வு இல்லாதபோது, சடங்குகள் மலிந்த வைதிகநெறி பயனற்றது என்பதைக் காட்டுகின்றது.

*"கங்கை யாடிலென் காவிரி யாடிலென்*
*கொங்கு தண்குமரித்துறை ஆடிலென்"*(அப்பர் 5-99-2)

*"கோலும் புல்லும் ஒருகையிற் கூர்ச்சமும்*
*தோலும் பூண்டு துயரமுற்றென்பயன்"* (அப்பர் 5-39-8)

இவை போலும் வினாக்கள், வைதிகத்தில் அடிப்படையிலமைந்த நம்பிக்கைகளும் பழக்கங்களும் உண்மையான இறையுணர்வு இல்லாதபோது பயனற்றவை என்பதனைப் பறைசாற்றுகின்றன. வருண அமைப்பு முறைப்படி "மிக இழிந்தவராயினும் இறையன்புடையாராயின் அவர் மிக்க ஏற்றமுடையவர்" என்பதனை எடுத்துக்காட்டும் வகையில்,

*"குலமில ராகிலும் குலத்துக் கேற்பதோர்*
*நலமிகக் கொடுப்பது நமச்சிவாயவே "*(அப்பர் 4-11-6)
*" அங்கமெலாம் குறைந்தழுகு தொழுநோயராய்*
*ஆவுரித்துத் தின்றுழலும் புலையரேனும்*
*கங்கைவார் சடைக்கரந்தார்க் கன்பராகில்*
*அவர் கண்டீர் யாம் வணங்கும் கடவுளாரே"*
(அப்பர் 6-95-10)

*" எவரேனும் தாமாக ............நடுதறியைக் காணலாமே "*
(அப்பர் 6-61-3)

என அமைந்துள்ள இப்பகுதிகள் போல்வன, அப்பர் காலத்துச் சைவ சமுதாயத்தின் நிலையையும், அதில் அவர் காணவிரும்பிய சமயச் சீர்திருத்த உணர்வையும் காணமுடிகின்றது.

இன்றையுண்மையை ஓராது, தம்மைப்போலத் தமிழ்ச் சமுதாயத்தினர் பலகாலம் பாழ்நெறி சென்று உழலாமல் பயன்பெறல் வேண்டும் எனக்கருதி,

*" நடையை மெய்யென்று நாத்திகம் பேசாதே"(5-31-6)*
*" பொக்கம் பேசிப் பொழுது கழியாதே"*(5-43-2)

என்பன போன்ற அனுபவ அறிவுரை வழங்குகின்றார்.

பரம்பொருள் இயல்பு கூறுங்கால், "சமயகோடிகள் எலாம் தந்தெய்வம் எந்தெய்வமென்று எங்கும் தொடர்ந்து எதிர் வழக்கிடவும் நின்றது" என்று தாயுமானவர் கூறுவர். தெய்வக் கொள்கையுடைய சமயங்கள், தத்தம் தெய்வமே உயர்ந்தது என்று கூறி வேறுபாடு கொள்வது கூடாது என்னும் கருத்தில் அப்பர், அப்பெயராற் கூறினாலும் அங்கே சிவபரம்பொருளே முன்னிற்கும் என்பதனை,

*"விரிவிலா அறிவினார்கள் வேறொரு சமயம் செய்து*
*எரிவினாற் சொன்னாரேனும் எம்பிராற்கு ஏற்றதாகும்"*
(அப்பர் 4-60-9)

*"யாதோர் தேவர் எனப்படுவார்க்கெலாம்*
*மாதே வன்னலால் தேவர்மற் றில்லையே"*(அப்பர் 5-100-4)

*"எரி பெருக்குவர் அவ்வெரி ஈசனது*
*உரு வருக்கம் தாவது உணர்கிலார்"* (அப்பர் 5-100-7)

*"அருக்கன் பாதம் வணங்குவர் அந்தியில்*
*அருக்கன் ஆவான் அரன்உரு அல்லனோ"*
(அப்பர்5-100-8)

என்பன போன்ற திருவாக்குக்களாற் புலப்படுத்தியுள்ளார்.

வேறுபடு சமய உண்மைகளைக் கற்றறிந்தும், புக்குணர்ந்தும் வீறுபடு சைவத்தின் உண்மை தெளிந்த முதுஞானியராகிய அப்பரடிகளின் வாழ்வையும் வாக்கையும் ஊன்றில் நோக்குங்கால், சமய உலகில் தமிழ்ச் சமுதாயம் தாழ்வுறாது, சிறந்து விளங்கவேண்டும் என்று விரும்பி உழைத்த உணர்வினை நன்கு உணரலாம்.

## வரலாறு கூறும்

# பூலாங்குறிச்சி

பேரறிஞர் வெ. வேதாசலம்.

தமிழக வரலாற்றில் தற்போது அழியாத இடத்தைப் பெற்ற ஊர் பூலாங்குறிச்சி. பொன்னமராவதிக்கு அருகில் சிவகங்கை மாவட்டத்தில் அமைந்த இவ்வூரின் மதகுமலைச் சரிவில் 1979ல் கண்டறியப்பெற்ற கல்வெட்டுக்கள் பூலாங்குறிச்சியின் வரலாற்றுச் சிறப்பிற்குக் காரணமாக அமைந்துவிட்டன.[1] தொல்பொருள் ஆய்வாளர்களையும் பிற அறிஞர் பெருமக்களையும் வியப்பில் ஆழ்த்தும் வகையில் இக்கல்வெட்டுக்கள் விளங்குகின்றன. கி.பி.400க்கும் கி.பி.500க்கும் இடைப்பட்ட காலத்தினைச் சார்ந்த இக்கல்வெட்டுக்கள் தமிழகத்தின் வரலாற்றிற்கு ஆதாரங்கள் மிகக் குறைவாகக் கிடைக்கும் காலத்தினைச் சார்ந்தவை. தமிழ்நாட்டில் கல்வெட்டுக்கள் அரிதாகக் கிடைக்கும் களப்பிரர் காலத்துக் கல்வெட்டுக்கள் பூலாங்குறிச்சியில் இருப்பது அவ்வூரின் வரலாற்றுப் பெருமையை வரலாற்று அறிஞர்களுக்கு உணர்த்தியது.

ஒல்லையூர்க்கூற்றம்:

ஆயிரத்து எண்ணூறு ஆண்டுகளுக்கு முன்னர் சங்ககாலத்தில் பூலாங்குறிச்சிப் பகுதி ஒல்லையூர் நாட்டுப்பகுதியைச் சார்ந்ததாக விளங்கியுள்ளது. ஒல்லையூர் நாடே பிற்காலத்தில் ஒல்லையூர்க்கூற்றம் என்ற பெயரில் அழைக்கப்பட்டு வந்துள்ளது. பூலாங்குறிச்சி ஒல்லையூர்க் கூற்றத்தினைச் சார்ந்த ஊர்களில் ஒன்றாக விளங்கியுள்ளது. "வேள்கூர்" (வேட்கூர்) என்பதே பூலாங்குறிச்சியின் பழமையான பெயராகும். இங்குள்ள குன்று பண்டையநாளில் "பச்செறிச்சில் மலை" என்றழைக்கப்பட்டுள்ளது. தற்போது மதகுமலை என்று வழங்கப்படுகிறது. இம்மலையின் மேல்புறம் மலையடி

வாரத்தில் கண்டறியப்பட்ட புதிய கல்வெட்டு "ஒல்லையூர்க் கூற்றத்து வேள்கூரு பச்செறிச்சின்மலை" என்று இதனைத் குறிப்பிடுகின்றது. "பச்செறிச்சில்" என்பதே பச்செறிச்சில் என்று கல்வெட்டில் குறிப்பிடப்படுகிறது. பொன்னமராவதியிலுள்ள கல்வெட்டு இவ்வூருக்கு கி.பி. 1284ல் "பூலாங்குறிச்சி" என்ற பெயர் வழங்கப்பட்டிருப்பதைத் தெரிவிக்கின்றது.[2] இக்காலத்தில் புறமலைநாடு என்ற நாட்டுப்பிரிவில் பூலாங்குறிச்சி இருந்துள்ளது.

ஒல்லையூர்க் கிழான்நாடு:

சங்ககாலத்தின் இப்பகுதியை ஒல்லையூரைத் தலைநகராகக் கொண்டு ஒல்லையூர்க்கிழான் என்ற குறுநிலமன்னன் ஆட்சிபுரிந்துள்ளதைப் புறநானூற்றுப்பாடல் தெரிவிக்கின்றது.[3] ஒல்லையூர் என்ற ஊர் பூலாங்குறிச்சிக்கு வடக்கே ஒலியமங்கலம் என்ற பெயரில் தற்போது இருக்கின்றது. ஒல்லையூர் கிழான் ஆண்ட நாட்டை அவனது மகன் பெருஞ்சாத்தன் என்பவன் தொடர்ந்து ஆண்டான். அவனது காலத்தில் இந்நாட்டின் மீது பூதப்பாண்டியன் என்ற பாண்டியமன்னன் படையெடுத்து வந்து கைப்பற்றினான். அதன்பிறகு ஒல்லையூர் நாடு பாண்டிய நாட்டின் பகுதியாக மாறியது. பாண்டிய நாட்டின் வடஎல்லையில் அமைந்த ஊராவது ஒல்லையூர் வெற்றிக்குப் பிறகே பூதப்பாண்டியன் ஒல்லையூர் தந்த பூதப்பாண்டியன் என்று பெருமையுடன் அழைக்கப்பட்டான்.

முல்லையும்பூத்தியோ:

பூதப்பாண்டியனோடு செய்த போரில் பெருஞ்சாத்தன் வீரமுடன் போரிட்டு மாய்ந்தான். இதனால் அந்நாட்டில் உள்ளோரும் அவனிடத்துப் பரிசு பெற்ற இசைபாடும் பாணர்களும் பாடினியரும் பெரிதும் வருத்தத்திற்கு உள்ளாயினர். இத்துயரினை வெளிப்படுத்தும் வகையில் குடவாயில் கீரத்தனார் என்ற புலவர் "முல்லையும் பூத்தியோ ஒல்லையூர் நாட்டே" என்று பாடிய புறநானூற்றுப்பாடல் தமிழ்

இலக்கியத்தில் அழியாது இடம் பெற்று நிற்கும் பாடலாகும்.[4]

*சேந்தன் வழியினர்:*

சங்க காலத்திற்குப் பின்னர் தமிழ்நாட்டைக் களப்பிரர்கள் என்ற அரசமரபினர் கைப்பற்றி ஆண்டனர். இக்காலத்தில் பூலாங்குறிச்சிப்பகுதி சேந்தன், சேந்தன்கூற்றன் என்று பெயர் கொண்ட புதிய மன்னர்களின் ஆட்சிக்குள் வந்தது. இம்மன்னர்களது கல்வெட்டுகளே பூலாங்குறிச்சி மதகுமலைச்சரிவில் காணப்படுகின்றன. இக்கல்வெட்டில் குறிப்பிடப்படும் மன்னர்கள் களப்பிரர் என்று ஒருசாராரும்[5] மற்றொரு சாரார் பாண்டியர் என்றும்[6] கருதுகின்றனர்.

*மதகுமலைக் கல்வெட்டுகள்:*

இம்மலைச்சரிவில் மூன்று பெரிய கல்வெட்டுகள் உள்ளன. இவற்றின் காலத்தினை கி.பி. 400-500க்கும் இடைப்பட்ட காலத்துக் கல்வெட்டுக்கள் என்று ஆய்வாளர்கள் கணித்துக் கூறியுள்ளனர்.[7] இக்கல்வெட்டில் வரும் ஆண்டை சிலர் அரசர்க்குரிய ஆட்சியாண்டு என்றும், சிலர் சகஆண்டு என்றும் கொள்கின்றனர். சகஆண்டு என்று கருதுகின்றவர்கள் இக்கல்வெட்டின் காலம் கி.பி.270 ஆக இருக்கவேண்டும் எனக்கருதுவர்.[8] ஆனால் எழுத்தமைதி கி.பி. ஐந்தாம் நூற்றாண்டைச் சார்ந்ததாக உள்ளது. இவற்றில் இரண்டு கல்வெட்டுக்கள் தெளிவான முறையில் படிக்கப்பட்டுள்ளன. ஒரு கல்வெட்டு மட்டும் சிதைந்து போனதால் படிக்க இயலாத நிலையில் உள்ளது. முதல் கல்வெட்டு சேந்தன் என்ற மன்னனின் காலத்தில் இப்பகுதியில் அந்தணர்களுக்குத் தானமாக ஊர்கள்(பிரமதேயம்) அளிக்கப்பட்டதைத் தெரிவிக்கின்றது. வெள்ளேற்றான்மங்கலம், சிற்றையூர் முதலிய பிரமதேய ஊர்கள் இக்கல்வெட்டுகளில் குறிப்பிடப்படுகின்றன. இத்தானத்திற்கு அழிவு செய்கின்றவர்கள் ஆயிரத்து அறுநூறு காணம் (காசுகள்) அபராதம் விதிக்கப் பெறுவார்கள் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளன. தமிழ்நாட்டில் காசுகளைப் பற்றித் தெரிவிக்கும் முதல் கல்வெட்டு இதுவாகும். பதிற்றுப்பத்தின்

அடிக்குறிப்பிலும் காணம் என்ற சொல் வருகிறது.

சேந்தன் கல்வெட்டிற்குத் தென்புறம் காணப்படும் கல்வெட்டே இன்னும் படிக்கப்படாத நிலையில் உள்ளது. இக்கல்வெட்டுள்ள பகுதியில் தாமரை மலரின் மீது திரிசூலம் பொறிக்கப்பட்டுள்ளது. இது சிவன் கோயில் தொடர்பான சின்னமாகும். இக்கல்வெட்டிற்குத் தென்புறம் அமைந்துள்ள கல்வெட்டே முழுமையாக நன்கு படிக்கப்பட்டுள்ளது. சேந்தன்கூற்றன் என்ற மன்னனது காலத்தில் செய்யப்பட்ட சமயம் தொடர்பான அறப்பணிகள் பற்றி இது தெரிவிக்கின்றது. இவற்றை முன்னின்று நடத்தியவன் சேந்தன்கூற்றனின் கடல் போன்ற பெரும்படையின் தலைவன் எங்குமான் ஆவான். இத்தகு சிறப்புப் பெற்ற படையையும் படைத்தலைவனையும் பெற்ற சேந்தன்கூற்றன் தமிழ்நாட்டின் வலிமைபடைத்த மன்னனாக விளங்கியிருக்க வேண்டும். கொங்குநாடும் பாண்டிநாடும் சோழநாடும் இவனது ஆட்சிக்குக்கீழ் இருந்துள்ளன.

சேந்தன்கூற்றனின் காலத்தில் ஒல்லையூர்கூற்றத்து வேள்கூர் பச்செறிச்சில் மலையின் மீது தேவகுலம் (கோயில்) ஒன்று தோன்றுவிக்கப்பட்டது. முத்துாற்றுக்கூற்றத்து விளமர் என்ற ஊரிலும் தேவகுலம் ஒன்று தோன்றுவிக்கப்பட்டது. மேலும் மதுரையில் உலவியத்தன்குளத்தின் வடதிசையில் அமைந்த துறவியர் பள்ளியில் (தாபதபள்ளி) "வசிதேவனார் கோட்டம்" ஒன்று அமைக்கப்பட்டது. இம்மூன்று கோயில்களில் காவலாக அரசு அதிகாரிகள் நியமிக்கப்பட்டனர்.

பச்செறிச்சில் மலை மீது செய்விக்கப்பட்ட தேவகுலத்திற்கு உரியவற்றைச் செய்கின்றவர்களாக குழலூர் என்ற ஊரில் உயிர்துறந்த உடையாரால் நியமிக்கப்பட்டவர்களே இருக்க வேண்டும் என்று முடிவு செய்யப்பட்டது. இத்தேவகுலம் பூலாங்குறிச்சி மலையின் மீது எடுக்கப்பட்ட தேவகுலமாகும்.

சேந்தன்கூற்றன் காலத்தில் எடுக்கப்பட்ட மூன்று கோயில்களுக்கும் காவலாக அத்திகோசத்தார், உள்மனையார், நாற்பால்திணைகள் ஆகியோர் காவலாக இருந்தனர். இவற்றிற்கு

அறப்பணிகள் செய்வர்களாகப் பாண்டகர், சேவகர், பருமசாரிகள், தருமிகள், ஊர்காவலர் ஆகியோர் இருந்தனர். இவ்வரசியல் ஆணையை அரசனிடமிருந்து கேட்டு வந்து கூறியவர்கள் வருவாய்த்துறை அதிகாரியாக விளங்கிய உலவியப் பெருந்திணை நல்லங்கிழான் இளங்குமரன், கீரங்காரி, அம்பருகிழான் குமாரம்போந்தை ஆகியோர் ஆவார்கள். ஓலையில் எழுதியவன் கீரங்காரிகண்ணன் ஆவான். தமிழ்நாட்டில் இதுவரை கிடைத்துள்ள நிலவுடைமை தொடர்பான கல்வெட்டு ஆவணங்களில் இதுவே மிகப்பழமையானதாகும், முதன்மையானதாகும். வடநாட்டில் அசோக மன்னர் கல்வெட்டோடு இதனை ஒப்பிடலாம்.

கல்வெட்டில் குறிக்கப்படும் முத்தூற்றுக்கூற்றம் என்ற நாடு திருவாடனை தேவகோட்டை ஆகிய பகுதிகளிலுள்ள ஊர்களை அடக்கியதாகும். இதில் விளமர் என்ற ஊரில் தேவகுலம் ஒன்று எடுக்கப்பட்டுள்ளது. இன்றும் திருவாடனை வட்டத்தில் விளமர் என்ற ஊர் ஒன்று உள்ளது. கல்வெட்டில் குறிக்கப்பெறும் "மதிரை" இன்றைய மதுரையாகும். முதல் கல்வெட்டில் குறிப்பிடப்படும் கூடலூர் நாடு திருமயம் வட்டத்தில் இருந்திருக்கின்றது, இந்நாட்டில் அளிக்கப்பட்ட பிரமதேயமான சிற்றையூர் இன்று சித்தூர் என்ற பெயரில் உள்ளது[9]

*பூலாங்குறிச்சியில் சமணப்பள்ளி*

பூலாங்குறிச்சியில் சமணசமயம் சிறப்புற்று விளங்கியுள்ளது. இதற்கு ஆதாரமாக ஊருக்கு வடக்கேயுள்ள குன்றின் தென்புறம் இயற்கையான குகைத்தளம் ஒன்று உள்ளது. இக்குகைத்தளத்தின் மேற்புறம் முழுவதும் உளியால் செதுக்கப்பட்டு முகப்பில் மழைநீர் வடியாமல் புருவம் வெட்டப்பட்டுள்ளது. இது ஆயிரத்து எண்ணூறு ஆண்டுகளுக்கு முற்பட்ட சமணப்பள்ளியாக விளங்கியிருக்க வேண்டும். இப்பள்ளி சமண முனிவர்கள் தங்கி வழிபாடு செய்யும் இடமாக இருந்திருக்கின்றது. இதன் வெளிப்புறம் பாறையின் உச்சியில் சமணப்பெரியாராகிய தீர்த்தங்கரரின் புடைப்புச் சிற்பம் உள்ளது.

முக்குடையின் கீழே மழித்த தலையுடன் நீண்ட காதுகளுடன் அமர்ந்த நிலையில் இருக்கும் இச்சிற்பம் நேமிநாதராக இருக்க வேண்டும். இவரது அருகே நின்ற நிலையில் சமணசமயப் பெருந்தெய்வமான இயக்கி அம்பிகாவின் உருவம் உள்ளது. இவ்விரண்டு சிற்பங்களும் கி.பி.எட்டாம் நூற்றாண்டைச் சார்ந்தவையாகும்.

நடுகற்கள்.

பூலாங்குறிச்சி ஏரியின் நடுவே கல்வெட்டு பொறிக்கப்படாத நிலையில் வீரனுக்காக எடுக்கப்பட்ட நடுகல் சிற்பம் ஒன்று உள்ளது. இது பாண்டியர் காலத்தினைச் சார்ந்தது. தீரத்துடன் சண்டையிட்டு இறந்த வீரனின் நினைவாக அவனது உருவம் பொறித்து எடுக்கப்பட்ட நினைவுக்கல் இதுவாகும். இவ்வேரிப்பகுதியில் சங்ககாலத்தினைச் சார்ந்த ஈமச்சின்னங்கள் (Megalithic Monuments) காணப்படுவது இவ்வூரின் பழமையைச் சங்ககாலத்திற்குக் கொண்டு செல்கிறது.

*அய்யனார் கோயில்*

கி.பி. பத்தாம் நூற்றாண்டில் முதல்பராந்தகசோழன் காலத்தில் (கி.பி. 941) நாட்டுப்புறத்தெய்வமான அய்யனார்க்கும் கோயில் ஒன்று பூலாங்குறிச்சியில் இருந்ததைத் தெரிவிக்கின்றது. இக்கோயிலில் இருந்த அய்யனார் சிற்பத்தினைக் கொன்றையூர் என்ற ஊரைச் சேர்ந்த சூரன்நாகை என்பவன் செய்தளித்துள்ளான். இதனை இங்குக் காணப்படும் பராந்தகசோழனின் தமிழ்க்கல்வெட்டு தெரிவிக்கின்றது. கல்வெட்டில் குறிப்பிடப்படும் சூரன்நாகையின் கொற்றையூர் இன்று பூலாங்குறிச்சிப் பகுதியிலேயே கொன்னையூர் என்ற பெயரில் இருக்கிறது. கல்வெட்டில் குறிப்பிடப்படும் அய்யனார் சிற்பம் இன்று தலையிழந்த நிலையில் மதகுமலைச்சரிவின் அருகிலுள்ள நிலத்தில் காணப்படுகின்றது. இச்சிற்பம் இருந்த கோயில் தற்போது அழிந்துவிட்டது. அக்காலத்தில் இச்சிற்பத்திற்கும் கோயிலுக்கும் காவலாகத் "திசையாயிரத்து ஐநூற்றுவர்" என்ற வணிகர்குழு இருந்ததைப் பராந்தக

சோழனின் கல்வெட்டு தெரிவிக்கின்றது. எனவே கி.பி. ஒன்பதாம் நூற்றாண்டில் வணிகப்பெருவழியில் வணிகர்கள் தங்கியிருந்த வணிகத்தளமாகவும் பூலாங்குறிச்சி விளங்கியது என்பதை இது காட்டுகின்றது. அக்காலத்தில் தென்னிந்தியாவில் கீழ்திசைநாடுகளுக்கும் சென்று வணிகம் செய்த வணிகர்குழுவான திசையாயிரத்து ஐநூற்றுவர் பூலாங்குறிச்சியில் இருந்திருப்பது குறிப்பிடத்தக்கது. பாண்டியநாட்டில் திசையாயிரத்து ஐநூற்றுவர் பற்றியும், அய்யனார் வழிபாடு பற்றியும் குறிப்பிடப்படும் பழமையான கல்வெட்டுக்களில் இதுவும் ஒன்றாகும்

பிற்காலப்பாண்டியர் காலம்

பிற்காலப்பாண்டியர் காலத்தில் பூலாங்குறிச்சி பற்றிய தகவல்களைப் பொன்னமராவதி சுந்தராசப்பெருமாள் கோயில் கல்வெட்டு ஒன்று தெரிவிக்கின்றது. பூலாங்குறிச்சி ஊரார் பொன்னமராவதியில் உள்ள அழகப்பெருமாள் கோயிலுக்கு (சுந்தரராசப்பெருமாள் கோயில்) சேலூரான அழகப் பெருமாள் நல்லூர் பற்றில் இருந்த கன்னங்குழி, வல்லவன்வயல் முதலிய குளங்களையும் அதனைச் சார்ந்த நிலங்களையும் விற்பதற்கு இசைந்து விலைக்கு விற்றுக் கொடுத்திருந்தனர். இதனைத் தெரிவிக்கும் கல்வெட்டு மாறவர்மன் சுந்தரபாண்டியன் காலத்தினைச் சார்ந்ததாகும்.[10]

பூலாங்குறிச்சி பற்றிய மேற்கண்ட வரலாற்றுச் செய்திகள் அனைத்தும் அது தமிழ்நாட்டு வரலாற்றில் சிறப்பு வாய்ந்த கல்வெட்டுக்களைக் கொண்ட ஊர் என்பதைக் காட்டுகின்றது. மேலும் இது சமயச் சிறப்பும், வணிகச் சிறப்பும் வாய்ந்த ஊராக இருந்துள்ளதை உணர்த்துகிறது.

அடிக்குறிப்புகள்

1. R. Nagaswamy, "An outstanding Epigraphical Discovery of Tamilnadu" (Mimeo), V World Tamil Conference, Madurai. 1981 January.

2. சடையவர்மன் குலசேகரபாண்டியனின் பொன்னமராவதிக் கல்வெட்டில் வேட்கூர் என்ற ஊர் ஒன்று குறிப்பிடப்படுகிறது. இது பிராமணர் குடியிருப்பான பிரமதேயமாக இருந்துள்ளது. இதனால் " வேட்கூரான மலைத்துஜவச் சதுர்வேதிமங்கலம்''என்று இது அழைக்கப்பட்டுள்ளது. பூலாங்குறிச்சியின் ஒரு பகுதியாக வேட்கூர் இருந்ததா? அல்லது வேறு ஊரா என்பது ஆய்வுக்குரியது.

3. புறம் பா.242

4. மேவது.

5. Natana. Kasinathan, "Pulankurichi Inscription - A Rebook" தொல்லியல் கருத்தரங்கு, தொகுதி-2, தமிழ்நாடு அரசு தொல்லியல்துறை, பக்-157-65.

6. எ. சுப்பராயலு, எம்.ஆர். ராகவவாரியார்," பூலாங்குறிச்சிக் கல்வெட்டுகள்"ஆவணம் இதழ் 1, தமிழகத் தொல்லியல் ஆய்வுக்கழகம், திருச்சி 1991,

7. மேலது பக் 57-69

8. R. Nagaswamy, "An outstanding Epigraphical Discovery of Tamilnadu".

9. Inscription of Pudukottai State, Ins. No. 83.

10. IPS. No. 986, 398.

# ஆதியூர் அவதானி சரிதத்தில் தீண்டாமை எதிர்ப்புச் சிந்தனைகள்

—பேரறிஞர் *தா.ஈசுவரபிள்ளை*

தனி மனிதர்களை உறுப்பினர்களாகக் கொண்ட ஓர் அமைப்பு சமுதாயம் ஆகும். இச்சமுதாயம் சீராகச் செயல்படச் சமுதாயத்துள் பல நிலையங்களும் நிறுவனங்களும் குழுக்களும் காணப்பெறும். சமுதாயத்தில் காணப்பெறும் பொருளாதாரம், கல்வி, குடும்பம் போன்ற பல நிறுவனங்களுள் சாதி முறை என்ற நிறுவனங்களும் அடங்கும்.

பல்வேறு சமுதாய, பொருளாதார, சமயக் காரணிகளால் தோற்றம் பெற்று வளர்ச்சியுற்றுக் காணப்படும் நிறுவனம் சாதிமுறை ஆகும். சாதிமுறை பல்வேறு தன்மைகளைக் கொண்டு திகழ்கின்றது. அவற்றுள் ஒன்று தீண்டாமை ஆகும். குறிப்பிட்ட பிரிவினரை வேறு சில குறிப்பிட்ட பிரிவினர் சாதி முறையின் அடிப்படையில் காண்பதற்கும் தீண்டற்கும் தகுதியற்றவர்கள் எனக் கருதி ஒதுக்கிவைக்கும்போது சாதிமுறையின் தன்மைகளுள் ஒன்றான தீண்டாமை எண்ணம் தலை தூக்குகின்றது.

தீண்டாமை என்ற சாதியத் தன்மை கொடுமை யானது. மனித நேயமற்றது. சமுதாய நலனுக்கும் சமுதாய முன்னேற்றத்திற்கும் தனி மனித முன்னேற்றத்திற்கும் ஊறு விளைவிக்கக்கூடியது என்று கருதப்பெறும் நிலையில் இக்காலத்தில் பல சமுதாய நல அமைப்புகளும் சமுதாய நலச் சிந்தனையாளர்களும் அரசும் தீண்டாமையை ஒழிக்கும் பொருட்டுத் தீண்டாமை எதிர்ப்புச் சிந்தனைகளையும் நடவடிக்கைகளையும் மேற்கொண்டு வருவதைக் காணலாம். ஆனால் இற்றைக்கு 124 ஆண்டுகளுக்கு முன்னர்த் தோன்றிய 1875-இல் வெளிவந்த தமிழில் தோன்றிய முதல் நாவல் என

அறிஞர்கள் சிலரால் கருதப்பெறுகின்ற ஆதியூர் அவதானி சரிதம் என்ற நூலில் தீண்டாமை எதிர்ப்புச் சிந்தனைகள் இடம்பெறுமாற்றை அறிய முடிகின்றது. இனி, ஆதியூர் அவதானி சரிதத்தில் இடம்பெறும் தீண்டாமை எதிர்ப்புச் சிந்தனைகளைக் காணலாம்.

ஆதியூர் அவதானி சரிதம் என்ற படைப்பில் இடம்பெறும் முதன்மைப் பாத்திரம் வினையாளன் ஆகிய அவதானி. இவர் அந்தணர் குலத்தைச் சார்ந்தவர். இவருடைய வாழ்க்கை வரலாற்றைக் கூறும் இந்நூலில் ஆசிரியர் வித்துவான் சேஷையங்கார் அவதானி மருத்துவக் கல்லூரியில் சேர்ந்து மருத்துவம் பயிலுவதாகக் காட்டுகின்றார்.

இதைக்கண்ட அந்தணர்கள்,

*"ஆங்காரத்தோடே அவதானி முன் திரண்டு*
*உன் சாதி என்ன, உறுகுடியின் சீர்த்தி என்ன*
*புன் சாதி செய்யும் புழுக்கைத் தொழிலிழைத்துச்*
*சாதி கெடுக்கும் சதிகாரா எங்கிருந்தாய்*
*நீதி மதம் துறந்து நீங்கினால் தோஷமில்லை*
*பிணம் தின்னி அன்றோ பிணம் அறுத்துச் சோதிப்பான்*
*தீட்டுப்படியாதோ பார்ப்பானை*
*பார்ப்பானோ நீயும் படித்த பறையன் என்றார்"*

என வசை பாடுவதாகக் காட்டுகின்றார். பிணம் அறுக்கும் தொழில் செய்பவர்கள் புன் சாதியினர் என்றும், அத்தொழில் புழுக்கைத் தொழில் என்றும் கருதப்பெற்ற சமுதாயச் சூழலில், உயர்சாதியினராகிய அந்தணர்கள் அத்தொழிலைச் செய்யும்போது தீட்டு ஏற்படும் என்று எண்ணிய தீண்டாமை எண்ணம் இவண் வெளிப்படுத்தப்படுகின்றது. தூய்மையின்மை என்பதன் அடிப்படையிலும் தீண்டாமை எண்ணம் தோன்றுவதாகச் சமூகவியலாளர்கள் சுட்டுதல் இவண் குறிப்பிடுவதற்குரியதாகும்.

அவதானியின் தாயும்,

*"பிணமறுத்துப் பார்த்தல் பிசகிது ஞாயமன்று*
*குணமன்று பிள்ளாய் குரங்குப்பிடி வேண்டாம்,"*

என அறிவுரை கூறுகின்றாள். இவற்றைக் கேட்ட அவதானி.

*"கள்ளைக் குடிப்பவரும் கைமோசம் செய்பவரும்*
*உள்ளத்துள் ஒன்றாய் உதட்டொன்றாய் உரைபவரும்*
*கொடுத்தவன் சாக என்று கோரும் பெரியவரும்*
*எடுத்தறு தக்கவென்றே எண்ணமிகும் புண்ணியரும்*
*பிறருடைய வாழ்வு பொறுக்காத பேதையரும்*
*பிறர் பொருளை வவ்வுதற்குப் பேராசை கொள்பவரும்*
*பொய்ச் சாஷி சொல்லிப்பிழைக்கும் புரட்டர்களும்*
*இச்சகம்பாடி இருந்துண்ணும் பாவிகளும்*
*வக்கனை பேசி வழிச் சண்டை கிண்டிவிட்டுக்*
*கைக்கொள்ளை கொள்ளும் கடன்காரப் பேயர்களும்*
*திண்ணைகள் தூங்கித் தடங் கெட்ட மாக்களைக் கண்டு*
*உன்னிகள் போல உறுக்கும் பதடர்களும்*
*கொடுத்த இடம் வாழ்வு கொடாத இடம் கல்வெடுப்பு*
*வடிப்பமாய்ப் பேசிவரும் வல்லடி வம்பர்களும்*
*அடுத்துக் கெடுப்பவர்களும் ஆகாத செய்பவர்களும்*
*தொடுக்கும் வழிகளுக்குள் துட்ட வழி நாடுவோரும்*
*பொய்யாணை இட்டுப் பொறுத்தார்க்குத் தீங்கு செய்தும்*
*ஐயோ என்று எண்ணா அநியாயப் பாதகரும்*
*கட்டுக் கட்டாகக் கனக்க விபூதியிட்டு*
*மட்டில்லா பட்டையிட்ட வண்ணப் பெருதூண்போல்*
*சாணுக்கு மேல் அகலச் சாயக் கரை பொலிய*
*ஒப்பும் துகில் உடுத்து ஓரைந்து மட்டும் சொல்லி*
*வைப்பாட்டிக் கொண்டையிலே வாடும் மருவெடுத்தே*
*அம்மன் பிரசாதம் ஆத்துமா ஈடேறும்*
*இம்மைச் சுகம் தரும் இந்நாளும் என்று சொல்லி*
*ஏமாற்றி மூடர்களை எத்திப் பணம் பறிக்கும்*

*சீமான்கள் ஈங்கிவர்பின் தேடி நான் போகவோகாண்?*
*இப்படிப் பட்டவர்கள் எத்தனையோ பேர் நம் குலத்தில்*
*செப்படுவித்தை காட்டிச் சீவனம் செய்பவர்கள்*
*அப்படிக்கு ஒன்றறியேன் ஆகாத காரியங்கள்*
*தப்பாம் என் வித்தயினார் சுக சீவியாயிருந்து*
*தத்துவங்கள் ஆராய்ந்தால் தரணியில் தீட்டுமுண்டோ*
*வித்தகன் கைவேலை விதித்தறிந்தால் குற்றமுண்டோ*
*பிணத்தீட்டுப் போவதற்குப் பின்ன வினையில்லையோ தான்*
*குணக்கு மனத்தவர்கள் கூறுவதும் கோணலன்றோ?*
*ஈசன் கரத்தமைந்த எண்ணரிய இவ்வுடம்பை*
*சீசீயெனத் தொலைத்தல் சீட்டர்கள் செய்கையாமோ?*
*ஆன்மா பிரிந்துவிட ஐம்பூத யாக்கையிது*
*தான் மாத்திரம் இராது தக்கதன் மாத்திவையாய்*
*பிரியும் சமயம் பிண நாற்றத்தால் எடுக்கும்*
*எரியிடா விட்டாலே எங்கும் விஷமாகும்*
*என்பது கொண்டே இருந்த பெரியோர்கள்*
*என்பளவாக எரியிடுக என்று வைத்தார்.*
*மற்ற உயிர்கள் மறித்தக்கால் ஆங்கவற்றை*
*செத்தவுடனே சேமிப்பார் தின்றொழிப்பார்*
*ஏனம்மா வீட்டில் எலிகள் பெருச்சாளிகள்*
*ஈனப் புழுக்காப்பும் எத்தனையோசாம் அவைக்கு*
*வீடே சுடுகாடு மேலாம் மனிதர் உடல்*
*காடே கழியவேண்டும் கை தொட்டால் தீட்டுமுண்டோ?*
*அற்ப உடல் போல் நம் அங்கம் அழியாது*
*சொற்பக் கடிகையிலே துர்நாற்றம் போகாது*
*காக்கைக்கழுகு பிடுங்கக் கண்டு சகியார்கள்*
*ஆக்கை அதனால் அரிய வரிசை உண்டு*
*பாக்கியமுள்ள பரமன் படைப்பதனில்*
*மிக்கோன் அறிவால் விளங்கிடும் இன் உயிர்தான்*
*உவந்து வசிக்கும் உடலுக்குத் தீட்டுமுண்டோ?"*

எனப் பதில் உரைக்கின்றார்.

அதாவது, கட்குடியர், கைமோசம் செய்பவர், போலிப் பேச்சு பேசுபவர், பொய்மையுடையவர், பேராசையுடைய வர்கள், பொய்ச் சாட்சி கூறுவோர். வீண் கலகம் மூட்டுவோர், சோம்பேறிகள், பிறரைச் சுரண்டுவோர்கள், வம்பு பேசுவோர்கள், அடுத்துக் கெடுப்பவர்கள், தீய வழிகளை நாடுபவர்கள், பொய்யானை இடுவோர்கள், இறையடியார் போல் வேடமிட்டுப் பெண்ணாசை கொள்வோர்கள், பிறரை ஏமாற்றுவோர்கள் முதலியோர் நம் குலத்தில் வாழ்ந்து வருகின்றனர். அவ்வாறு செய்யாமல் மருத்துவக் கல்வி பயில்வதால் தீட்டு ஏற்படாது. மேலும், உடலை விட்டு ஆன்மா பிரியும்போது பிண நாற்றம்தான் வீசும். இறந்த மனித உடலை எரிக்கின்றனர். பிற உயிர்கள் இறந்தால் மக்கள் அவற்றை உண்பர். எலிகள். பெருச்சாளிகள் முதலியவற்றிற்கு வீடு இடுகாடு. ஆனால் மனிதர்கள் இறந்தால் வீட்டைவிட்டுக் காட்டிற்குக் கொண்டு செல்வர். எனவே இறைவன் படைத்த உடம்பில் தீட்டு கிடையாது என்று அவதானி அறிவுரை கூறுவதாகக் காட்டித் தீண்டாமை எண்ணத்திற்கு எதிராகச் சிந்தனைகளை வெளிப்படுத்துகின்றார்.

ஏற்கனவே திருமணமான அவதானி மனைவியின் நடத்தையாலும் தீய பண்புகளாலும் மனம் புண்பட்ட நிலையில் சத்திரியச் சாதியைச் சார்ந்த தேவதத்தை என்ற நற்குணங்கள் கொண்ட விதவைப் பெண்ணை மணம் செய்ய விரும்புகிறார். இதை அறிந்த அவர் தாய்,

> *"குணம் தரு, வித்தையென்று கொண்டாடி முன்பொருகால்*
> *பிணம் அறுத்துச் சாதிகெட்டுப் போக வழிதேடி நின்றான்*
> *சூத்திர மாதவளைத் தொட்டு மனைவியென்று*
> *சாத்திரம் சொல்லியவள்தன்னை மருவுகின்றான்"*

என்றும்,

> *"மாதின் மயக்கில் மயங்கிய என் மகன்தான்*
> *சாதிக்கடுக்காத சங்கடம் செய்கின்றானே"*

என்றும் வருந்துகின்றாள். உயர் சாதியைச் சார்ந்தவர்களும் தாழ்ந்த சாதியினர் எனக் கருதப்படுவோர்களைத் தொட்டு மணம் செய்வதன் மூலம் தீட்டு ஏற்படும் என்ற உயர் சாதியினரின் சாதிய நம்பிக்கை இவண் வெளிப்படுத்தப்படுகின்றது. இதற்கு அவதானி, இச்சமுதாயத்தில் பலர் நாட்டுக்குக் கேடிழைத்தல், தீநெறியில் நடத்தல், பொய்ச் சாட்சி கூறல், பிறன் மனை நயத்தல்,கைக்கூலி வாங்கல், களவாடல், கற்பழித்தல், பொய் வேடமிட்டுத் திரிதல், கடன் வாங்கிவிட்டு ஏமாற்றல் எனப் பல இழி செயல்களில் ஈடுபடுகின்றனர். ஆனால் தேவதத்தை தாழ்ந்த சாதியைச் சார்ந்தவள் என்பதால் அவளை மணப்பின் தீட்டு ஏற்படும் என்று அனைவரும் கூறுகின்றனர். ஆனால் முற்கூறிய சமுதாயத் தீங்கிழைக்கும் மக்கள்தான் தீண்டத்தகாதவர்கள் என்கின்றார்.

இவ்வாறு, சமுதாயத்தில் காணப்பெறும் தீண்டாமை பற்றிய எண்ணத்தை வெளிப்படுத்தி, இத்தீண்டாமை எண்ணம் ஒழிவதற்குரிய சிந்தனைகளையும் வித்துவான் சேஷையங்கார் புலப்படுத்தக் காணலாம்

*பயன்பட்ட நூல்கள்*

*வித்துவான் சேஷையங்கார்,*

ஆதியூர் அவதானி சரிதம்,

*(முதல் தமிழ் நாவல்)*

*(ஸ்ரீதாமுத்தரா சாலை, சென்னைப் பட்டணம், 1875.)*

அன்பு அச்சகம், மதுரை – 1. ✆ 741116